தேன்தமிழிதழ்

BTA
BERGEN TAMILSK AVIS
45
November
2025
Org.nr: 926 840 320 - ISSN: 2703-8440 (Print ISSN: 2703-8785)

வணக்கம்.

நோர்வேயில் அக்டோபர் மாதம் என்றால் தன்னார்வ தொண்டர்கள் மற்றும் சமூகப் பணியாளர்களுக்கு முக்கிய மாதமாகக் கருதப்படுகின்றது. நகரசபைகள் கலை கலாசார நாட்களை ஒழுங்கு செய்து கலாசார மண்டபங்கள், வாசிகசாலைகள், மக்கள் கூடும் இடங்கள் அனைத்திலும் கலை நிகழ்வுகள், கண்காட்சிகள், கலாசார செயல்பாடுகள், விளையாட்டுக்கள், கலந்துரையாடல்கள் என பல்வேறு செயல்பாடுகள் நடத்துவதுண்டு. அத்தோடு சிறந்த தொண்டு பணியாளர்களை, தொண்டு நிறுவனங்களை தேர்வு செய்து, அவர்களுக்கு பரிசளித்து, மதிப்பளித்து, கௌரவப்படுத்தி மகிழ்ச்சிப் படுத்துவதுண்டு.

நோர்வே நாட்டில்தான் பெரும்பான்மையான மக்கள் தொண்டுப் பணிகளில் தம்மை இணைத்துக் கொண்டு, இந்நாட்டின் பண்பாட்டுக்காக, சுகாதாரத்துக்காக, மனிதத்துக்காக உழைத்து வருகின்றார்கள். இதன் வழியாக சிறந்த சமூக சூழலை உருவாக்குகின்றார்கள். கலாசார நடவடிக்கைகளில் பன்முகத்தன்மையை வெளிப்படுத்துகிறார்கள்.
தமது சமூகத்திற்கும், தமது அயலவர்களுக்கும், சுற்றுச்சூழலுக்கும் நம்மால் இயன்றளவு பிரதிபலன் பாராது, ஊதியமேதும் பெறாது, உதவிப் பணிகளை புரிதலே தன்னார்வ தொண்டாகும். நோர்வேயில் தான் ஏராளமான தொண்டு நிறுவனங்கள் சிறந்த நிர்வாகத் தன்மையோடு இயங்கி வருகிறது எனலாம். இளையோர், பெரியோர் அனைவரும் தொண்டு நிறுவனங்களில் தம்மை இணைத்துக் கொண்டு, அதன் வழி. தொண்டாற்றி வருகிறார்கள். இவ்வாறான பணிகளுக்கு புலம்பெயர்ந்து வாழும் வெளிநாட்டவர்களையும் நோர்வே அரசும், நகர சபைகளும் அழைத்து நிற்கின்றது. ஆனால் நமது மக்கள் தொண்டுப் பணிகளில் தம்மை இணைத்துக் கொள்வது மிகவும் அரிதாகவே காணப்படுகிறது.
நாம் வாழும் சமூகத்துடன் நம்மை இணைத்துக் கொள்வதற்கு இப்பணிகள் சிறந்த ஊடகமாகும். இதன் வழி மனித நேயம் கொண்ட நல்ல மனிதர்களை நாம் நண்பர்களாக பெற முடியும். அதுமட்டுமல்லாது இந்நாட்டில் நாம் அதிகம் சந்திக்கும் மன அழுத்தத்தினை அகற்றவோ அல்லது குறைக்கவும் முடியும். தனிமையில் உளநல அழுத்தங்களுக்கு உள்ளாகுவோர் இவ்வாறான தொண்டுப் பணிகளில் தம்மை இணைத்துக்கொள்ளுதல் சிறந்த உளநல மருந்தாகும் என உளவியல் நிபுணர்கள் அறிவுறுத்துகின்றனர்.
புலம்பெயர்ந்து இங்கு வாழும் எமது மக்களையும் நோர்வே இத்தொண்டுப் பணிகளுக்கு வரவேற்று நிற்கிறது. நீங்கள் வாழும் பகுதி நகரசபைகள் ஊடாக தொண்டு நிறுவனங்களில் இணைந்து கொள்ளுங்கள். அதுவே நமக்கு அர்த்தம் நிறைந்த வாழ்வை தரவல்லது.

மேலும், கார்த்திகை மாதம் இறந்த ஆத்மாக்களை நினைவு கூரும் மாதம். அதிலும் சிறப்பாக கார்த்திகை 27ம் நாளன்று நமது ஈழ தேச விடுதலைக்காக தமது உயிரினை ஈய்ந்த தியாகிகளுக்கு, அந்த மாவீரர்களுக்கு ஆத்மார்த்தமாக வணக்கம் செலுத்தும் நாளாகும். இந்நாளில் எமது மண்ணுக்காக போராடி உயிர் ஈய்ந்த தேசப் புதல்வர்களுக்கு தலை வணங்கி வணக்கத்தை செலுத்துகிறோம்.

தேன் தமிழிதழ்
Ansvarlig redaktør: **Julius Antoni**
ஆசிரியர்: **யூலியஸ் அன்ரனி**
தொலைபேசி எண்: (47) 924 63 674
Vipps 729129, eller
bank konto: 3626 31 78585

BTA
BERGEN TAMILSK AVIS

வருமுன் காப்போன்

Egenberedskap

நோர்வேயின் போர்க்கால தற்பாதுகாப்பு முன்னேற்பாடுகள்

-யூலியஸ் அன்ரனி-

நமது அன்றாட வாழ்நிலையில் நெருக்கடிகள் ஏற்படும் போது, சந்திக்கும் சவால்களை ஒரு வாரம் சமாளிக்க முடியுமா?
Egenberedskap: Kan du klare deg selv i en uke?
(நோர்வே நகர சபைகளின் வேண்டுகோள்)

காலநிலை மாற்றம், யுத்தம், பெருந்தொற்று நோய்கள் அச்சுறுத்தல்களின் விளைவாக நாம் பல நெருக்கடிகளை, சவால்களை சந்திக்கலாம்.

- **மின்சாரம் தடைப்படலாம்**
- **குடிநீர் நிறுத்தப் படலாம்**
- **கழிவு நீர் அமைப்பு தடைப்படலாம்**
- **உணவு பொருட்கள் இல்லாது போகலாம்**
- **இணைய மற்றும் தொலைபேசி தொடர்புகள் நிறுத்தப்படலாம்**
- **அவசிய மருந்துகள் இல்லாது போகலாம்**

இவ்வாறான நெருக்கடியில் சமாளித்து, ஒரு வாரம் உங்களை நீங்களே நிர்வகிக்கத் தயாராக இருக்க வேண்டும். எனவே நகரசபைகள் ஒரு வாரத்துக்கான சுய முன்னேற்பாடுகள் செய்ய ஆலோசனை வழங்குகிறது. அதனை செயல் முறைப்படுத்தவும் வற்புறுத்துகிறது.

பல்கலாச்சாரக் குழுவில் உள்ள அனைவரையும் சுய தயாரிப்பு குறித்த ஆலோசனையைப் பின்பற்ற அனைவரையும் நகரசபை ஊக்குவிக்கிறது, மேலதிக விபரங்களை sikkerhverdag.no எனும் இணையத்தில் பார்க்கலாம்.

ஒக்ரோபர் இறுதி வாரம் "அவசர காலத் தயார்நிலை" பிரச்சினையை நகரசபை வலியுறுத்தியது. இது ஒரு சமூகமாக நாம், எதிர்பாராத மற்றும் நெருக்கடிகளுக்குத் தயாராக இருப்பது எவ்வளவு முக்கியம் என்பதை நினைவூட்டுகிறது. நெருக்கடியான ஒரு வாரம் உங்களை நீங்களே நிர்வகிக்கத் தயாராக இருக்க வேண்டும்.

நமது வாழ்நிலை நெருக்கடிக்கு உடல் ரீதியாக தயாராக இருப்பது போல, உளரீதியாகவும் நம்மை பாதுகாத்துக் கொள்ள தயார்நிலையில் இருத்தல் வேண்டும்.

அதிக துக்கம், அதிர்ச்சி, இழப்பு மற்றும் தனிமை நம்மைத் தாக்கும்போது, "அந்நெருக்கடிகளை நாம் எவ்வாறு எதிர்கொள்கிறோம்" என்பதும் இதில் அடங்கும். இவ்வாறான நெருக்கடிகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில், வீடுகளில் தனிமை வாட்டும் நேரங்களில், முதன்மையாக தேவாலயங்களைத் தொடர்பு கொள்ளுவது சிறந்தது.

தேவாலயங்கள் பெரும்பாலும் திறந்த மற்றும் பாதுகாப்பான ஒன்றுகூடும் இடம் என்று குறிப்பிடப்படுகிறது.

நல்ல நண்பர்களை நேரடி தொடர்பில் வைத்துக் கொள்ளுதல் அவசியமாகும்.



~யூலியஸ் அன்ரனி~

நோபல் பரிசுகள் 2025

மனிதகுலத்திற்கு நன்மை தரும் ஆய்வுகளிலும், தொழில்நுட்ப கண்டுபிடிப்புக்களிலும் ஆழமான பணிகளினை ஆற்றிவரும் சாதனைகளுக்கும், உலக அமைதிக்காக தொண்டாற்றிவரும் சமூகப் பணியாளர்களுக்காகவும் நோபல் பரிசுகள் ஆண்டு தோறும் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வகையில் 2025ம் ஆண்டுக்கான நோபல் பரிசுகள் பற்றிய தேர்வுகளை நோபல் குழுவினர் அறிவித்துள்ளனர்.

இயற்பியல், வேதியியல், பொருளியல், இலக்கியம், மருத்துவம், அமைதி (சமாதானம்) ஆகிய துறைகளில் பணியாற்றிவரும் 14கல்விமான்கள் மற்றும் சமூக தொண்டர்களுக்கு வழங்கப்பட விருக்கிறது.

மரியா கொரினா மச்சாடோ அவர்கள் 2025 அமைதிக்கான நோபல் பரிசை வென்றுள்ளார். Venezuela நாட்டை சேர்ந்த மரியா 1967 ஒக்டோபர் 7ம் நாளன்று பிறந்தவர். 2002 ஆம் ஆண்டில் Fundacion Atenea அறக்கட்டளையின் தலைவராக தனது பணி வாழ்க்கையை ஆரம்பித்தார். தொடர்ந்து தேசிய சட்டமன்ற உறுப்பினராக தீவிரமாக அரசியலில் நுழைந்தார். 2014 இல் அதிகரித்து வரும் சர்வாதிகார ஜனாதிபதி Maduro அவர்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களுக்கு தலைமை தாங்கினார், பின்னர் எதிர்க்கட்சியின் முக்கிய தலைவராக இருந்து வருகிறார்.

மக்களுக்கான ஜனநாயக உரிமைகளை மேம்படுத்துவதற்கும், சர்வாதிகாரத்திலிருந்து ஜனநாயகத்திற்கு ஒரு நியாயமான அமைதியான மாற்றத்தை அடைவதற்கும் அவர் போராடி வருகின்றார். அதேவேளை வெள்ளை மாளிகை தனது எதிர்வினை கருத்தாக Venezuela மரியா கொரினா மச்சாடோ அவர்களுக்கு அமைத்திக்கான நோபல் பரிசை வழங்குவதன் மூலம் நோபல் குழு அமைதிக்கு பதிலாக அரசியலைத் தேர்வு செய்கிறது என ஊடகத்துக்கு தெரிவித்துள்ளது.

Maria Corina Machado

Nobel Peace Prize 2025

Born: 1967, Venezuela

Residence at the time of the award: Venezuela

Prize motivation:

“for her tireless work promoting democratic rights for the people of Venezuela and for her struggle to achieve a just and peaceful transition from dictatorship to democracy”

மருத்துவத்திற்கான நொபெல் பரிசு இம்முறை மூவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
ஒரு ஜப்பானியர் மற்றும் இரண்டு அமெரிக்கர்கள் இம்முறை பரிசைப் பெறுகிறார்கள்.

நுண்ணியிரோடு சேர்ந்து புற்றுநோய் கலங்களையும் அழிக்கும் எமது நோயெதிர்ப்பு மண்டலம் ஏன் தனது சொந்தக் கலன்களை விட்டு வைக்கிறது என்பதை, அந்தப் பணியை செய்யும் Regulatory T cells அடையாளம் கண்டு 1990இல் கருதுகோளை முன்வைத்தவர் Shimon Sakaguchi இவர் ஒரு ஜப்பானியர்.

Shimon Sakaguchi

இந்தக் கலங்களை Tregs என்று அழைப்பர். இவை மனிதரில் தங்கள் கலங்களை தாங்களே அழிப்பதால் வேறு வகையில் சொல்வதென்றால் வேலியே பயிரை மேய்வதை தடுத்து Auto Immune Disease உருவாகாமல் பார்ப்பது இவற்றின் பணி.

Mary Brunkow

பிறகு எப்படி பல கோடிக்கணக்கானவர்களை பாதிக்கும் Auto Immune நோய்கள் உருவாகின்றன? இங்கே தான் Mary Brunkow மற்றும் Fred Ramsdell ஆகியோரின் FOXP3 ஜீன் குறித்து கண்டுபிடிப்பு முக்கியம் பெறுகின்றன.

Tregs epzePu Fopa கலங்களை உற்பத்தி செய்யும் தகவல்களை encoding செய்து வைத்திருக்கும் ஜீன்களே இவை. இவற்றில் ஏற்படும் விகாரங்கள் (Mutations) காரணமாகவே Auto Immune நோய்கள் உருவாகிறது என்பதை அவர்கள் நிறுவினார்கள்.
எனவேதான் இந்த மூவருக்கும் சேர்த்து மருத்துவத்திற்கான நொபெல் பரிசு அறிவிக்கப்பட்டது.

Fred Ramsdell

காசா இனப்படுகொலை: ஒரு கூட்டுக் குற்றம்

தி.சிறிதரன்

பாலஸ்தீன ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் மனித உரிமை நிலை குறித்து ஐநா சார்பில் பிரான்சிஸ்கா அல்பனிஸ் அவர்களின் சிறப்பு அறிக்கை சாரம்சம்.
காசாவில் நடைபெறும் இனப்படுகொலை என்பது இஸ்ரேல் மட்டுமல்ல, பல சக்திவாய்ந்த மேற்கத்திய நாடுகளின் இணைபங்கும், அனுமதியும், ஆதரவும் உள்ள கூட்டுக் குற்றம் என அறிக்கை குறிப்பிடுகிறது.

live streamed atrocities என பெயரிடப்படுகிறது.
இது பாலஸ்தீனர்களை மனிதராகவே காண மறுக்கும் காலனித்துவ மனப்பான்மையால் ஊக்குவிக்கப்படுகிறது.

முக்கிய அம்சங்கள்

1. கூட்டு குற்றம்
அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பிய நாடுகள் போன்றவை இஸ்ரேலுக்கு ஆயுதங்கள், அரசியல் பாதுகாப்பு, நிதி மற்றும் “மனிதாபிமான” பெயரில் ஆதரவளித்துள்ளன. இதன் மூலம் இஸ்ரேலின் காலனித்துவ ஆட்சியும், இனவெறி அடிப்படையிலான ஆக்கிரமிப்பும் தொடர்ந்துள்ளது.

2. சட்ட அடிப்படை
அனைத்து நாடுகளும்:
இனப்படுகொலை மற்றும் இனவெறி (Apartheid) தடுக்க, சட்ட விரோத ஆக்கிரமிப்பை அங்கீகரிக்காமல் இருக்க, அத்தகைய ஆட்சிகளுக்கு உதவி செய்யாமல் இருக்க கடமைப்பட்டுள்ளன. இவை மீறப்பட்டால் அது சட்டப்படி குற்றப்பொறுப்பு எனப்படும்.

3. மேற்கத்திய நாடுகளின் பங்கு
அமெரிக்கா தனது UN veto அதிகார மூலம் காசா யுத்த நிறுத்த கோரிக்கைகளை தடை செய்தது.
பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் வெறும் வார்த்தை அளவில் ஆதரவளித்தன. ஆனால் நடவடிக்கை எடுக்கவில்லை. சில அரபு நாடுகள் (எகிப்து, கட்டார், சவூதி அரேபியா) பொருளாதார உறவுகளை கொண்டுள்ளன.

4. நாடுகள் எடுக்கும் குறைந்த நடவடிக்கைகள்.
சில நாடுகள் மட்டுமே (தென் ஆப்ரிக்கா, கொலம்பியா, நிகராகுவா, பொலிவியா) இஸ்ரேலுடன் தூதரக உறவுகள் துண்டித்தன. சிலர் (பஹ்ரைன், துருக்கி, சிலி, யோர்டன்) உறவுகளை குறைத்தன. பெரும்பாலான மேற்கத்திய நாடுகள் இனப்படுகொலை இல்லை என மறுத்தன.

5. ஆயுதம் மற்றும் பொருளாதார ஆதரவு
1976 முதல் ஆயுதத் தடையை ஐ.நா கேட்டபோதும், இஸ்ரேலுக்கு அமெரிக்கா, ஜெர்மனி, இத்தாலி போன்ற நாடுகள் அதிக அளவு ஆயுதங்களை வழங்கின. இதனால் “காசா அழிவு இயந்திரம்” தொடர்ந்து இயங்குகிறது. அறிக்கை கூறுவது,
இப்போது முழுமையான பொருளாதார, கலாச்சார, புறக்கணிப்பு சட்டரீதியாக கடமை என.

6. மனிதாபிமான முகமூடி
மேற்கத்திய நாடுகள் “மனிதாபிமான இடைவேளைகள்” என்று சொல்லி உண்மையான யுத்தநிறுத்தமுறையைத் தவிர்த்தன. இதனால் உணவு, மருந்து போன்ற அடிப்படை உதவிகள் தடுக்கப்பட்டு, மக்கள் அழிவைத் தடுக்க இயலாமல் போனது.

7. சர்வதேச நீதிமன்றங்கள்
2024, 2025காலத்தில் சர்வதேசநீதிமன்றம் (ICJ) காசாவில் “இனப்படுகொலை அபாயம்” இருப்பதை உறுதி செய்தது. இஸ்ரேல் ஆக்கிரமித்த நிலங்களிலிருந்து முழுமையாக விலக வேண்டும் என உத்தரவு பிறப்பித்தது. ஆனாலும், மேற்கத்திய நாடுகள் அந்த தீர்ப்புகளை புறக்கணித்தன.

8. முடிவாக
சர்வதேச சட்ட ஒழுங்கு தகர்ந்து போகும் நிலையில் உள்ளது. உலகம் புதிதாக மறுமலரர்ச்சி அடைய வேண்டும் என்றால்,
1. இஸ்ரேலுக்கு அனைத்து விதமான ஆதரவையும் நிறுத்த வேண்டும்.
2. ஆயுதம், வர்த்தகம், கலாச்சார தொடர்புகள் அனைத்தும் நிறுத்தப்பட வேண்டும்.
3. பாலஸ்தீன மக்களின் முழுமையானகாசா இனப்படுகொலை-ஒரு கூட்டு குற்றம்.

(பாலஸ்தீன ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் மனித உரிமை நிலை குறித்து சிறப்பு அறிக்கை - பிரான்சிஸ்கா அல்பனிஸ்)

காத்துக் கிடக்கிற மண்

-வ.ஐ.ச.ஜெயபாலன்



எங்கள் சூரிய பயல்
கொடி மின்னலில்
வெடி வெடிக்கும் மேகங்களில்
வானவில் பட்டம் ஏற்றுகிற
கோடை மழைகாலம்.
□
போன வசந்தத்தில்
துருவங்களுக்கு பறந்து சென்ற
வலசைப் பறவைகளா இவை.
அதற்குள் மீண்டும் காதலிக்கவும்
கலந்து விளையாடி குஞ்சு பொரிக்கவும்
தேன் சிந்தும் ஈழ மண்ணை
தேடி தேடி வருகின்றனவே.
எங்கள் புலம்பெயர்ந்த பிள்ளைகள்போல
வாழ தெரிந்தவை.
□
வானில் யூத கிபீர் விமானங்கள்
கொலைவெறியில் சுற்றிய போதுகூட
எங்கள் சிறுவர்கள் ஓடி ஒழியவில்லை.
கண்மூடி மின்னல் பார்த்தும்
இடிக்கு அஞ்சுவதாய் நடித்தும்
ஆலங்கட்டி பந்தாடியும்
குதூகலமாக கும்மாளமடித்தனர்.
இதுவா போர் நிகழும் மண்?
இவர்களை தோற்கடிக்க முடியாது என
அன்றே நம்பினேன்.
நாம் தோற்கடிக்கப்படவில்லை போலும்.
பின்னடைவாகவே இருக்க வேண்டும்.
கங்கை கரை மரங்கள் என்றாலும்
எங்கள் வேர் பாதாளம்வரைக்கும்
□
தொலைதூரத்து குண்டுகளுடும்
ஆடிப்பாடும் சிறுவர்கள் கூச்சலில்
மீண்டு உயிர்க்கிற இந்த மண்
வெல்லபடுவது எப்படி?
உண்மையில் நாம்
வெற்றிகொள்ளப் படவில்லை போலும்.
□
மீண்டும் வருவமென சிறகு அசைக்கும்
வலசைப் பறவைகளின் பின்னே
எங்கள் பிள்ளைகள் சென்றனர்.
பரம்பரை பொன்னென
மண்ணின் கனவுகளை சூடிக்கொண்ட
எங்கள் பிள்ளைகள்.
□
புலங்கள் பெயர்ந்தாலும்
மரபணுவில் தாய்பறவை
எழுதி வைத்த வழி தேடி
இளைய பறவைகளே வருகுதே.
காதலும் வீரமும் கனியும்
இந்த காந்தருவ நாடு
எட்டு திசைகளிலும் வாழுமெங்கள்
பிள்ளைகளின் தாய்மடியன்றோ.
□
வடகிழக்காய் மெத்தை விரித்து
காத்துக் கிடக்கிறது தாய் மண்.

மூன்று பதக்கங்களும் இலங்கையர்களின் உளவியல் சிக்கலும்

-Imam Adhnan-

ஃபியா யாமிக் மூன்று பதக்கங்களை வென்றதைத் தொடர்ந்து அவர் பெயரும், புகழும், படங்களும் வெளிச்சத்திற்கு வருகின்றன. அவை சமூகவலைத்தளங்களில் ஏகப்பட்ட கொமெண்ட்களும் விவாதங்களும் உருவாகிவிட்டிருக்கிறது. இலங்கையில் வாழும் பலதரப்பட்ட இனமதத்தினைச் சேர்ந்தவர்களும் ஃபியாவினை கொண்டும், அவரைச்சுற்றி உருவாகியிருக்கும் கதையாடல்களைக் கொண்டும் தங்களின் மனக்கிடக்கைகளை வெளிப்படுத்துவதை அவதானிக்க முடிகிறது.

இவர்கள் அனைவரினதும் விவாதப் பொருளின் அடிப்படை ஃபியாவின் இனமத அடையாளமான முஸ்லிம் என்பதும் அவரது புகைப்படங்களில் அணிந்திருக்கும் ஆடையும் தான். ஆடை என்றால், முஸ்லிம் பெண்கள் கட்டாயம் மறைக்கவேண்டிய பகுதிகளென (அவ்ரத்) இஸ்லாம் சொல்கின்றவையாக “ஏற்படுத்திக்கொண்ட” விதிமுறை-களைப் பேணி உடலை மறைத்து ஆடை அணியாமை. அதாவது, அவர் தொடையிலிருந்து கால்வரையான பகுதியினையும் தலையையும் மறைக்கவில்லை. இந்த விவாதங்களில் எது சரி? எது தவறு? எனும் இருமை வாதச் சுழலுக்குள் இறங்காமல், அவற்றை இடையீடு செய்து அவற்றின் உள்ளடக்குகளில் இயங்கும் கருத்தமைவுகளையும் அவற்றின் சிக்கல்களையும் புரிந்துகொள்ள முனைவதுதான் இப்பிரதியின் நோக்கம்.

முதலில் ஒரு விடயத்தினை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நமது சிந்திப்புகளும் அபிப்பிராயங்களும் நம்முடன் இணைந்திருக்கும் அடையாளங்களுடன் நெருங்கிய பிணைப்புக் கொண்டது. அந்த அடையாளங்களை எல்லாம் அந்த அடையாளங்களைச் சுற்றிக் கட்டமைக்கப் பட்டிருக்கும் அரசியல் கதையாடல்களையும் நெருக்கடிகளையும் புறக்கணித்து விட்டுத்தான் நமது அபிப்பிராயங்களை உருவாக்க வேண்டும். அதுவே சரியான கருத்தமைவுகளை உருவாக்க ஏது செய்யும் எனும் நிலைப்பாட்டுடன் எனக்கு சிறிதும் உடன்பாடு கிடையாது. ஏனென்றால் உண்மையும் நியாயமும் எப்பொழுதும் சூழமைவு (context) சார்ந்து எழும் விடயம்தான். உண்மைகள் எல்லாம் சார்பியத்தன்மை கொண்டவைகள்தான்.

இலங்கையில் வாழும் முஸ்லிம்கள் எல்லோரும் ஒற்றைத் தன்மையானவர்கள் அல்ல. அவர்கள் பேணும் பண்பாடு, கலாச்சாரம் வாழ்வுமுறை, மதநிலைப்பாடு என அனைத்தும் பன்மையான வேறுபாடுகள் கொண்டவை. வித்தியாசங்கள் நிறைந்தவை. இலங்கையிலிருக்கும் முஸ்லிம் பெண்கள் அணியும் ஆடை விடயத்திலும் அப்படித்தான். காலிலிருந்து முகம்வரை மறைத்து அணிபவர்களும் உண்டு. முகத்தையும் மணிக்கட்டையும் மறைக்காமல் உடையணிபவர்கள் உண்டு. முழங்கைவரை மறைக்காமல் ஆடை அணிபவர்கள் உண்டு. தலையை மறைக்காமல் ஆடை அணிபவர்கள் உண்டு. தலையை மறைக்காமலும் முந்தானை இல்லாமலும் ட-சேர்ட்டும் ட்ரௌசரும் அணிபவர்கள் உண்டு. முழங்கால் வரை-யான ஸ்கேர்ட் அணிபவர்களும் உண்டு. அப்படி அணிவதால் எல்லாம் அவர்கள் இஸ்லாத்தை விட்டு வெளியேறியவர்களோ அல்லது இஸ்லாமிய கடமைகளுடன் உடன்பாடற்றவர்களோ அல்ல. அவற்றை எல்லாம் பின்பற்றவே செய்கிறார்கள்.

இந்த வித்தியாசங்களினால்தான், ஃபியாவின் ஆடைபற்றி எந்தக் கரிசனையும் காட்டாமல் முஸ்லிம்கள் பலரும் அவரின் சாதனையை அகமகிழ்ந்து பாராட்டுவதைப் பார்க்கிறோம் ஏனென்றால், முஸ்லிம் பெண்களுக்கு மத்தியில் ஆடையின் விடயத்தில் காணப்படும் பன்மைத் தன்மைகள் இவர்களுக்கு சகஜமாகப் பழக்கப்பட்டிருக்கும் அதுபோக தொழில், சூழமைவு நிமித்தம் பெண்கள் வெவ்வேறு ஆடைத் தெரிவுகளைச் செய்பவர்கள் என்பதையும் புரிந்துகொண்டவர்கள்.

பிரச்சினை எங்கு எழுகிறது என்றால், முஸ்லிம்களை எல்லாம் ஒற்றைத் தன்மை கொண்டவர்களாக

பொதுமைப்படுத்திப் பார்க்கும் சிந்திப்பில்தான். இந்தப் பொதுமைப் படுத்தலை பெரும்பாலான முஸ்லிம்கள், அவர்கள் பின்பற்றும் இஸ்லாமிய சட்டவிதிமுறைகளை முன்வைத்து மேற்கொள்கின்றனர். முஸ்லிம் அல்லாதவர்கள் முஸ்லிம் எனும் இனஅடையாளத்தை முன்வைத்து மேற்கொள்கின்றனர். இந்தப் பொதுமைப் படுத்தல்களைத் தூக்கி வீசிவிட்டால், நாம் எதிர்கொள்ளும் பெரும்தொகையான பிரச்சினைகள் கருக்கொள்வதற்கான அடித்தளமே இல்லாமல் போய்விடும்.

முஸ்லிம் பெண்கள் என்றால் எல்லோரும் இப்படித்தான் ஆடையணிவார்கள், அணியவேண்டும் எனப் பொதுமைப் படுத்திக்கொண்ட முஸ்லிம் சமூக ஊடகப் போராளிகள், ச.ஃபியாவின் தலையையும் தொடையையும் பார்த்து மனம் வெம்புகின்றனர். பொருமி வெடிக்கின்றனர். இப்படி வெம்பும் அனேகர் ஆண்களாக இருப்பது ஒன்றும் ஆச்சரியமான விடயம் அல்ல. தந்தைமய்ய (patriarchal) சமூகத்தின் கலாச்சார பண்பாட்டை காவல்புரிந்து காக்கும் வேலையை தங்களின் பொறுப்பென ஆண்களே பிரதானமாக வரித்துக் கொண்டவர்கள். தங்களின் ஆண்மை, புனிதம், கண்ணியம் என எல்லாவற்றையும் பெண் உடலின்மீது கவிழ்த்திவிட்டுப் பேணிப்பாதுகாக்க மாய்பவர்கள்.

“இஸ்லாத்தின் கண்ணியத்தை ச.ஃபியா பாதுகாக்கவில்லை”
“இவள்தானா இஸ்லாத்தைப் பாதுகாக்கப் போகிறாள்?”
“ச.ஃபியா உலகில் ஜெயித்து மறுமையில் கைசேதப்படப் போகிறார். சாதிக்க ஹராமான உடையணிந்து நரகம் போகாதீங்க”
“ச.ஃபியாக்கு அல்லாஹ் ஹிதாயத்தைக் (நேர்வழியை) கொடுத்து, அடுத்த போட்டியில் காலை மறைத்தும் ஹிஜாப் அணிந்தும் ஓடப் பிரார்த்திக்கிறேன்”

இவை போன்ற வசனங்களை வெவ்வேறு வார்த்தைகளில் மாறிமாறி சொல்லி வருவதை அவதானிக்க முடிகிறது. ஹிஜாபை அணிந்து தொடையை மறைத்து ஓடமுடியாது எனச் சொல்லப்பட, அப்படி அணிந்து ச.ஃபியாவுடன் ஓடிய ப்ஹ்ரைன் பெண்ணின் ஃபோட்டோவைப் போட்டு, மார்க்கம் சொல்வதுபோல் ஓடமுடியாது. அதனைப் புறக்கணித்து விட்டுத்தான் ஓடமுடியும் என்பது போலி விம்பம் என முன்வைப்பதையும் அவதானிக்க முடிகிறது.

இப்படியெல்லாம் முஸ்லிம்கள் சொல்வதன் பின்னால் இயங்கும் பலகாரணிகளுள் ஒன்றாக, “அரசியல் சார் சமூக உளவியலும்” காரணியொன்று இருப்பதும் அக்கறை கொள்ளப்பட வேண்டியவை.

முஸ்லிம் பெண்கள் அணியும் அபாயாவும், ஹிஜாபும், நிகாபும் பெண்களின் மீதான ஒடுக்குமுறை. பெண்களின் சுதந்திரத்தை மறுப்பது எனும் கதையாடல் ஊடகங்களிலும் சமூகக் கதையாடல்களிலும் நிலைநிறுத்தப் பட்டிருக்கின்றன. ரெவீலிங்க் ஆக ஆடை அணிவதே சுதந்திரம் பெண்ணியப் புரட்சி எனும் கதையாடலும் நிலைநிறுத்தப் பட்டிருக்கின்றன.

இங்கு குறிப்பிடும் ரெவீலிங்க் ஆடைக்குப் பின்னால் இயங்கும் “பெண்களை மோகப்பொருளாக (sexual object)” கட்டமைத்துப் பேணப்படும் அரசியல் கதையாடல்களை விரிவாக பல கட்டுரைகளில் முன்வைத்து விவாதித்திருக்கிறேன். இது ஒருபுறம் இருக்க, இலங்கையில் அபாயா மற்றும் நிகாப் சார்ந்து ஏகப்பட்ட எதிர்மனோநிலைகள் ஏனைய இனங்களுக்கு மத்தியிலும் உண்டு. ஆயுதம், ஹெல்மட், நாய், ஹிஜாப் போன்றவற்றுடன் நுழைவது தடை என்பதை சுட்டிக்காட்டும் ஸ்டிக்கர்களும் போஸ்டர்களும் பல கடைகளில், வங்கிகளில், சில அரச-தனியார் நிறுவங்களின் நுழைவாயில்கள் போடப்பட்ட பல சம்பவங்கள் சந்தர்ப்பங்களும் இங்குண்டு.
இவற்றையெல்லாம் எதிர்கொண்டுவரும் முஸ்லிம்கள், தாங்கள் பின்பற்றும் ஆடை சார்ந்த நெருக்கடிகளை எதிர்கொள்ளும் உளவியல் விளைவாகவும் சபியாவின் ஆடை சார்ந்த எதிர் வினையைப் பார்க்க வேண்டிய தேவையும் இங்குண்டு.

ச.ஃபியா தொடையை மறைத்து, ஹிஜாப் அணிந்து இருக்காமையானது, தங்களின் மதகலாச்சார ஆடை அணிவதற்கு எதிரான வாதங்களுக்குத் துணை செய்வதாகவும் அது தங்களின் இருப்பிற்கு சிக்கலை உருவாக்கும் என்பதான உளவியல் நெருக்கடியையும் உருவாக்கிவிடுகிறது.

இப்படிச் சொல்வது ஒன்றும் எனது கற்பனை கிடையாது. அதனையே பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சிலரும் வெளிப் படுத்தியிருக்கிறார்கள். ச.ஃபியாவினை வாழ்த்தும் பல பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களும் தமிழர்களும் “முஸ்லிம் பெண்கள் எல்லாம் ச.ஃபியா போல் இருக்க வேண்டும்” எனும் அபிப்பிராயத்தினை பகிர்ந்து கொள்கிறார்கள். இந்த அபிப்பிராயத்தின் உள்ளியங்கும் உளவியல் மிகவும் சிக்கலுக்குரியது. சகவாழ்வுக்கு ஆபத்தானது. அவர்களின் அந்த அபிப்பிராயம் இரு விசயங்களைச் சுட்டிக்காட்டுகிறது.

ஒன்று: முஸ்லிமாகிய நீங்கள் எங்களால் பாராட்டப்படவும் ஏற்றுக்கொள்ளப்படவும் ஃபியாவினைப் போல் சாதனை புரியவேண்டும். நாட்டிற்குப் பெருமை தேடிக் கொடுக்க வேண்டும் எனச் சொல்கிறது.
இரண்டாவது: உடல் முழுவதையும் மறைக்காமல், ஹிஜாப் அணிந்து அடக்கு முறைக்குள் இருக்காமல், சுதந்திரமாக சபியா போல் இருங்கள் எனச் சொல்கிறது.
அதாவது, முஸ்லிமாகிய நீங்கள் எப்படி இருந்தால் நாங்கள் ஏற்றுக் கொள்வோம் எனும் பெரும்பான்மையினரிடம் சமைந்திருக்கும் உளவியல் நிபந்தனைகளையே இவை இரண்டும் வெளிப்படுத்துகின்றன.

சகவாழ்வு என்பது மற்றவைகளை அவற்றின் வித்தியாசங்களுடன் ஏற்றுக் கொள்வதுதான். ஏற்றுக்கொள்வதற்கான முன்நிபந்தனைகளை கற்பிதம் கொண்டிருப்பதல்ல. ஃபியா சார்ந்த கதையாடலை ஒட்டி தோழர் ஒருவர் முகநூலில் ஒரு பதிவைப் போட்டிருந்தார். அது அக்கறை கொள்ள வேண்டிய அவதானிப்பு. அதனை அப்படியே கீழே தருகிறேன்.

“இலங்கையில ஒரு முஸ்லிம் சாதனை படைச்சா முஸ்லிம் ஆட்கள் அவர் ஒரு முஸ்லிம் என்டதை சொல்லிதான் பெருமையடைய தொடங்குற, அதே நேரம் சிங்கள ஆட்கள் அவர் ஒரு முஸ்லிம் என்டத சொல்லாம பொதுவான இலங்கையர் என்டு சொல்லித்தான் பெருமையடைய தொடங்குற. ஒரு முஸ்லிம் சாதனை படைக்கனும் என்டா ஹபாயா போட்டுக்கு, தாடி வெச்சிக்கு, தொப்பி போட்டுக்குதான் சாதனை படைக்கனும், அதேது சிங்கள ஆட்களுக்கு முஸ்லிம் சாதனை படைக்கனும் என்டா முஸ்லிம் அடையாளம் சோல், தாடி, ஜூப்பா ஒன்டும் இருக்க போடா சும்மா சாதரன உடுப்போடான் சாதனை படைக்கனும். இதேது ஒரு முஸ்லிம் குற்றஸ் செயல்ல பிடிபட்டா முஸ்லிம் ஆட்கள் அவன் முஸ்லிம் பெயர் தாங்கி அவ்வளவுதான், என்டு அவன் ஒரு பொதுவான இலங்கையன் என்டு சொல்லி மறுக்கத் தொடங்குற, அதே நேரம் சிங்கள ஆட்கள் பிடிபட்டவன் பொதுவான இலங்கையன் என்டு சொல்லாம அவன் ஒரு முஸ்லிம் என்டததான் பெரிசா சொல்லி திணிக்க தொடங்குற. ஒரு முஸ்லிம் ஏதாவது கேஸ்ல அம்புட்டனும் என்டா முஸ்லிம் ஆட்களுக்கு அந்த ஆள் தொப்பி, ஹபாயா ஒன்டும் போடாம சும்மா முஸ்லிம் இல்லாத ஆள்போலதான் அம்புடனும், சிங்கள ஆட்களுக்கு முஸ்லிம் ஒராள் ஒரு கேஸ்ல அம்புட்டனும் என்டா அந்த ஆள் புல்லா தாடி வெச்சி, ஹபாயா போட்டு, பேஸ்கவர் போட்டு சாலிஹான வாக்குலதான் அம்புடனும். இது எல்லாத்துக்கும் நடுவுலதான் நல்லிணக்கம் இன ஒற்றுமை எல்லாம் ஊசலாடிக்கு உலாத்துது.” **-ஹஸ்னி அஹமட்-**

இவர் சுட்டிக்காட்டும் இந்த விடயங்களுக்குள் இயக்கும் உளவியலைப் புரிந்துகொள்ள W.E.B. Du Bois எனும் சமூகவியல் அறிஞர் முன்வைத்த இரட்டை சுய-பிரக்ஞைநிலை (double consciousness) உதவுகிறது. Du Bois ஒரு ஆபிரிக்க அமெரிக்கர். அடக்குமுறை கொண்ட

பெரும்பான்மை சமூகத்திற்குள் வாழும் சிறுபான்மையினர் இருவித சமூக அடையாளங்களை வரித்துக் கொள்ளவும் அதனடியாக அல்லாடவும் வேண்டியிருக்கிறது எனச் சுட்டிக்காட்டுகிறார். இந்த சிறுபான்மையினர் தங்களை அவர்களின் கண்கொண்டும், பெரும்பான்மையினர் தங்களை எப்படிப் பார்க்கின்றனர் எனும் கண்கொண்டும் நோக்கி, இயங்கவும் எதிர்வினையாற்றவும் வேண்டி இருப்பதை முன்வைத்தார்.
அடக்குமுறைக்கு உட்படும் ஒவ்வொரு சிறுபான்மை இனமும் தங்களின் வித்தியாசமான இருப்பை பாதுகாக்கவும், தாங்கள் சமூக விரோதிகள் இல்லை என்பதைக் காட்டவும் முன்னெடுக்கும் செயற்பாடுகளில் நிகழும் உளவியல் சிக்கலையே தோழரின் மேலுள்ள அவதானம் வெளிப்படுத்துகிறது.

ஆக, ஃபியா யாமிக் சார்ந்து எழுந்துள்ள இந்த விவாதங்கள், ஒரு முஸ்லிம் பெண் சார்ந்தோ அவரின் ஆடை சார்ந்தோ எழுந்துள்ள எளிய விவாதமாக குறுக்கிப் பார்க்க முடியாது என்பதே எனது நிலைப்பாடு. இலங்கையின் பன்மையான சமூகத்திற்குள், ஒரு சிறுபான்மை சமூகம் எவ்வாறு வரையறுக்கிறது, பெரும்பான்மை சமூகம் எப்படி வரையறுக்கிறார்கள் என்பவற்றின் அடியாக விளைந்திருக்கும் சமூக உளவியல் அழுத்தங்களின் அடியாகவும் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும். முஸ்லிம் சமூகத்திற்குள்ளே இருந்து உருப்பெறும் “நாங்கள் எல்லாம் ஒரே மாதிரியானவர்கள்” எனும் பொதுமைப்படுத்தலும், பெரும்பான்மை சமூகத்திலிருந்து வெளிப்படும் “நாங்கள் விரும்புவதுபோல் மாறிவிடுங்கள்” எனும் நிபந்தனையுடனான ஏற்பும், இரட்டைச் சுய-பிரக்ஞை நிலையின் விளைவான சமூகஉளவியலும் இணைந்தே சிக்கலை வளர்த்திருக்கின்றன. ஆரோக்கியமான சமூக மாற்றத்திற்கான உரையாடல் என்பது, இவை அனைத்தையும் புரிந்துகொண்டு இடைவினையாற்றுவதனூடாகவே மேற்கொள்ள வேண்டியது. □

ஏலியன் குழம்பி வருகிறது விஞ்ஞானிகள் உலகம்

M.A. Yaseer Arafath

முதன் முதலில் ஏலியன் தொடர்பாக விஞ்ஞானிகள் உலகம் குழம்பி வருகிறது. நாசா உட்பட உலகில் உள்ள விண்வெளி விஞ்ஞானிகள் முதன்முறையாக ஒரு Interstellar Body இயற்கையானதா அல்லது செயற்கையானதா என்று Comet 3I/ATLAS என்று பெயரிடப்பட்ட வான்பொருளில் குழம்பியுள்ளார்கள். இது 200000 Km/ hour வேகத்தில் சூரிய மண்டலத்தின் ஊடாக தனது பயணப்பாதையின் Trajectory கொண்டுள்ளதாக கணிக்கிப்பட்டுள்ளது.

அறிவியல் வரலாற்றில் Comet 3I/ATLAS இதுவரை நமது சூரிய மண்டலம் இருக்கும் அயலக விண்வெளியில் அவதானிக்கப்பட்ட மூன்றாவது வேறு நட்சத்திர மண்டலத்திற்கு சொந்தமான வான்பொருள் அதனால் தான் 3i என்று பெயர் வழங்கப்பட்டுள்ளது.

இதனால் பூமிக்கோ அல்லது சூரிய மண்டலத்திற்கோ எதுவிதமான நேரடி பாதிப்பும் இல்லை என்ற போதும் இதன் வழமைக்கு மாறான தரவுகள் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

Comet 3I/ATLAS பூமியை நெருங்கும் போது 1.8 astronomical units அல்லது 270 மில்லியன் கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் 3I/ATLAS கடந்த Oct. 30, 2025 அளவில் சூரியனுக்கு 1.4 au அல்லது 210 million kilometers தூரத்தில் செவ்வாய்கிரகத்தின் சுற்றுவட்ட பரப்பிற்குள் கடந்து சென்றது.

இது சிலிநாட்டில் Rio Hurtado அமைந்துள்ள நாசாவின் NASA- ATLAS (Asteroid Terrestrial-impact Last Alert System) ஆய்வு தொலைகாட்டி ஊடாக கடந்த ஜூலை 1, 2025 முதன் முதலில் அவதானிக்கப்பட்டது. அதை தொடர்ந்து உலகின் வெவ்வேறு பாகங்களில் நிறுவப்பட்ட மூன்று ATLAS தொலைகாட்டிகள் மற்றும் கலிபோர்னியா Caltech's Zwicky Transient Facilityஇலும் இது அவதானிக்கப்பட்டுள்ளது.
NASA வின் Hubble விண்வெளி தொலைகாட்டியில் கடந்த ஜூலை 21, 2025, பூமிக்கு 277 மில்லியன் மைல்கள் தொலைவில் அவதானிக்கபட்டது. ஹப்ள் தரவுகளின்படி



இது கண்ணீர்துளி வடிவில் இருந்தது. மற்றும் இதன் கருவில் உறைந்த பனிப்பாறை காணப்பட்டது. கடந்த ஒகஸ்ட் 20, 2025, இதன் கருவின் விட்டம் 5.6 கிலோமீட்டர் என்று கணிக்கப்பட்டுள்ளது.

3I/ATLASஇனை அவதானிக்க NASA தனது கீழ்வரும் அனைத்து அவதானிப்பு படைகளையும் களம் இறக்கியது Hubble, Webb, TESS, Swift, SPHEREx, Perseverance Mars rover, Mars Reconnaissance Orbiter, Curiosity rover, Europa Clipper, Lucy, Psyche, Parker NASA தரவுகளின்படி 3I/ATLAS மார்ச் 2026 வியாழனை கடந்த பின்னர் இது எமது சூரிய மண்டலத்தில் இருந்து விலகி செல்லும் என்று கூறப்படுகிறது.

முதன் முதலாக scientific fraternity மிக மிக அரிதாக இது ஒரு ஏலியன் பொருளாக இருக்க கூடும் என்று கருதுகிறது. ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தின் theoretical astrophysics பேராசிரியர் Avi Loeb இதை வழக்கத்திற்கு மாறான அவதானமான விடயமாக அவதானிப்பதாக மனிதகுலம் விழிப்புணர்வோடு இதை அவதானிக்க வேண்டும் என்று தெரிவிக்கிறார்.

இது வழமைக்கு மாறான திகிலான நிகழ்வு என்பது மட்டும் உறுதியாக தெரிகிறது. □

போதைப்பொருள் அற்ற தேசத்தை நோக்கி: நாம் அனைவரும் ஒன்றிணைவோம்!

இலங்கை அரசின் பிரகடனம்

“அகன்று செல்” - போதைப்பொருளுக்கு அடிமையான அனைவருக்கும் விடுதலை!
“முழு நாடே ஒன்றாக” தேசிய செயற்பாடு
”A Nation United” National Mission

* நம் இலக்கு:

போதைப்பொருள் அற்ற ஒரு புதிய சமுதாயம்! போதைப்பொருள் பாவனை என்பது தனி மனிதரையும், குடும்பத்தையும், நாட்டையும் சீரழிக்கும் பெரும் அச்சுறுத்தலாகும். இந்த சவாலை முறியடிக்க, நாம் அனைவரும் கைகோர்க்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

* அடிமைகளை இனங்கண்டு மீட்டல்:
போதைக்கு அடிமையானவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு உரிய சிகிச்சையும், ஆதரவையும் வழங்கி, அவர்களை மீண்டும் சமூகத்தில் ஒரு அங்கமாக்குவது நமது முதன்மையான கடமையாகும்.

* நாட்டைவிட்டு முற்றிலும் அகற்றுதல்: எமது நாட்டில் இருந்து போதைப்பொருள் விநியோகம், பாவனை ஆகியவற்றை முற்றுமுழுதாக ஒழித்துக் கட்டுவதற்கு அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு நாம் முழுமையான ஆதரவை வழங்க வேண்டும்.

* மக்கள் - அரசின் ஒருங்கிணைந்த செயல்பாடு
இந்த மகத்தான போரில், அரசாங்கத்தின் ஆதரவுடன், மக்கள் அனைவரும் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டும்.

* விழிப்புணர்வை ஏற்படுத்துதல்: போதைப்பொருள் பாவனையின் தீமைகள் குறித்து சமுதாயத்தின் அனைத்து மட்டங்களிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தி, புதிய ஆரோக்கியமான சமுதாய கலாச்சாரத்தை உருவாக்க வேண்டும்.

- குற்றவாளிகளைத் தெரியப்படுத்துதல்:
போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனையில் ஈடுபடும் குற்றச் செயல்களிலுள்ளவர்களைப் பற்றிய தகவல்களை உரிய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்துவதன் மூலம், அவர்களுக்கு எதிராக உடனடி சட்ட நடவடிக்கை எடுக்க வழிவகுக்க வேண்டும்.

* தேசத்தைப் பாதுகாத்தல்: இந்த நாட்டை போதைப்பொருளின் பிடியில் இருந்து விடுவித்து, பாதுகாக்கும் பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் உள்ளது.

* எதிர்கால சந்ததிக்காக!
நல்லதொரு நாட்டை எதிர்கால சந்ததியினருக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பு எம் அனைவருக்கும் உண்டு. வாருங்கள், போதைப்பொருள் அற்ற, வலிமையான, ஆரோக்கியமான ஒரு தேசத்தை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து உழைப்போம்!

* போதை அற்ற தேசம்
* அகன்றுசெல்
* தேசம்தலைநிமிர வைப்போம்.

சராசரியாக 21,000,000 மக்கட்தொகையுள்ள எமது நாட்டில் சராசரியாக 5,000,000 பேருக்குமேல் போதைக்கு அடிமையாக உள்ளனர். தினமும் 5000 பேர்வரை பாதிப்பு...
இது சாதாரண விடயமல்ல. அனைவரும் பொறுப்போடு செயற்பட உறுதியெடுப்போம்!
முழுநாடும் ஒன்றாய்...!

ஆறாக் காயங்களைச் சுமந்து கொண்டிருக்கின்றோம்.

-சிவா மாலதி-

எமது ஊரில் கடந்த ஒரு மாதத்திற்குள் போதைப்பொருளுக்கு அடிமையான இளைஞர் ஒருவர் தற்கொலை செய்திருந்தார். அவருக்கு 30 வயது. அந்த இளைஞர் போதைப்பொருளுக்கு அடிமையானதால் சீரழிந்தாரேயொழிய, அவரைப்பற்றிக் கூறியவர்கள் மிகவும் பண்பான, நல்மனதுடையவராகவே கூறினர். அவரின் மரணம் மனதைக் குடைந்துகொண்டே இருக்கின்றது. அவரின் வாழ்வும், மரணமும் அவரது குடும்பத்திற்கு மட்டுமே உரித்தான விடயமல்ல. அந்த இளைஞரின் தற்கொலையானது எமது சமூகத்தின் தோல்வியினைச் சுட்டிநிற்கின்றது.

ஒரு சமூகமாக இளைஞர்கள் ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ்வதற்குத் தேவையான, பாதுகாப்பான சமூகத்தை ஏற்படுத்தத் தவறிவிட்டோம். இளைஞர்களுக்கு வாழ்க்கை பற்றிய நம்பிக்கையினைக் கொடுக்கத் தவறிவிட்டோம். சிக்கலான உணர்வுகளைக் கையாள்வதற்கான ஆதரவினை வழங்கத் தவறிவிட்டோம். யுத்தம், சுனாமி மற்றும் பல பேரிடர்களினால் ஏற்பட்ட மனவடு புரையோடியிருக்கும் சமூகமாக நாம் ஆறாக் காயங்களைச் சுமந்து கொண்டிருக்கின்றோம். மிகவும் சிக்கலான உணர்வுகளைக் கையாளத் தெரியாத அல்லது அவற்றைக் கையாள்வதற்குப் போதிய வசதி வாய்ப்புக்களற்ற இளைஞர்களுக்கும், குடும்பங்களுக்கும் போதைப்பொருள் தற்காலிக விடுதலையை உத்தரவாதம் அளித்தது.
இதனாலேயே நாம் எமது இளைஞர்களை போதைப்பொருளுக்கு பலிகொடுத்துக் கொண்டிருந்தோம். இதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தோருக்கு மட்டுமே அதன் தீவிரத் தன்மையும், வலியும் புரியும்.

போதைப்பொருளுக்கு அடிமையான ஒருவரை மீட்டெடுப்பது என்பது எத்தகைய சிரமமானது என்பதுவும் பாதிக்கப்பட்டவர்களுக்கே தெரியும். இதுவரையில் இருந்த எந்தவொரு அரசாங்கமும் போதைப் பொருட்களுக்கெதிரான சுத்திகரிப்பினை முக்கியத்துவப் படுத்தவில்லை மாறாக, இதுவரை இருந்த அரசாங்கங்கள் அவற்றினால் பயனடைந்து கொண்டிருந்தன.

இளைஞர்களையும் நாட்டையும் சீரழித்துவந்த போதைப்பொருள் எனும் பேரழிவிற்கெதிரான அரசின் இம்முயற்சி பல விளிம்புநிலை மக்களுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும், எமது நாட்டின் இளைஞர்களுக்கும், எமது எதிர்காலத்திற்கும் விடிவாய் அமைய வேண்டும்.

நந்திக் கடலே நவில்வாயே!

நந்திக் கடலே உனையழிக்க
நாலா புறமும் திரண்டுவந்தார்!
நிந்தை பலவும் நீயடைந்தாய்!
நெருப்பால் உன்னைச் சுட்டெரித்தார்!
விந்தை பலவும் விளைவித்தே
வேங்கை வீரம் நீயுரைத்தாய்!
சிந்தை கலங்கி நிற்கின்றோம்!
சிலுவை சுமந்து நடக்கின்றோம்!

உன்றன் வருவாய் பெற்றேதான்
உழைக்கும் மக்கள் பலரன்றோ!
நன்மை பெற்ற ஏழையர்கள்
நலமாய் வாழ வழியானாய்!
வன்மம் வளர்ந்த நாள்களிலே
வறுமை போக்கி வளமானாய்!
சன்னம் பொழிய மக்களிங்கு
சரித்த கதையும் நீயறிவாய்!

தூது சென்றோர் துணையிருக்கத்
துணிவாய் நாங்கள் இருந்திட்டோம்!
மோதும் படையின் நின்றெம்மை
முழுதாய்க் காப்பாய் என்றிருந்தோம்!
சூது செய்தே எமையன்று
சுருக்கில் மாட்டி வைத்தனரே!
ஏது சொல்வேன் என்தாயே
எங்கள் ஏக்கம் தீர்ப்பாயே!

(விருத்தப் பாமழை ஆயிரம், 227)

செ. அன்புராசா, அமதி அடிகள்
இயக்குநர், நலனோம்பு மையம்,
மாங்குளம்

நோர்வே பாராளுமன்றில் முதல் பெண் Anna Rogstad

-யூலியஸ் அன்ரனி-

18ம் நூற்றாண்டில் நோர்வேயில் பெண்கள் தமது அன்றாட வாழ்வில் பல சவால்களையும், கட்டுப்பாடுகளையும் எதிர்கொண்டு வந்தனர். சாதாரண வாழ்வுரிமைகள் மறுக்கப் பட்டவர்களாக வீடுகளுக்குள் முடங்கி வாழ்ந்து வந்தனர். அடிப்படைக் கல்வியினைக்கூட கற்க அனுமதி மறுக்கப் பட்டவர்களாய் வாழ்ந்து வந்தனர். பின்னர் சற்று விழித்துக் கொண்ட பெண்கள் சிலர் தாமே தமது உரிமைகளுக்காக பல வழிகளிலும் போராட ஆரம்பித்தனர். அவ்வாறான போராட்டங்களில் முழுதாய் ஈடுபட்ட Anna Rogstad என்ற நோர்வே பெண் போராளி பற்றிய குறிப்புகள் சிலவற்றை இப்பதிவில் பார்க்கலாம்.

1911ம் ஆண்டு பாராளுமன்றில் Anna Rogstad நோர்வேயின் முதல் பெண் உறுப்பினர் ஆனார். பெண்களின் வாக்குரிமைக்கான போராட்டத்தில் இவர் முதன்மையானவராகத் திகழ்ந்தார். ஆண்களைப் போன்று சமமாக பெண்கள் உரிமைகளைப் பெறவேண்டும் எனவும், பெண்களின் கல்வி உரிமைக்காகவும் முன்னின்று போராடினார்.

“Anna Rogstad அவர்கள் அவரது பணியின் மீது வெற்றி காணும்வரை யாராலும் தடுக்க முடியாத ஒரு சக்தியாக இருந்தார்” என்று கல்வியாளரும் தொழிற்சங்கத் தலைவருமான Anna Sethne அவரைப் பற்றிய நினைவுரையில் பதிவு செய்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

Anna Rogstad 26.07.1854 அன்று Oppland எனுமிடத்தில் பிறந்தார். இவருக்கு பத்து வயதாக இருந்தபோது, இவரது குடும்பம் Trondheim எனுமிடத்துக்கு குடிபெயர்ந்தது. அங்கு இவரது தந்தை நீதிமன்ற எழுத்தாளராகப் பணியாற்றினார். Trondheim எனும் ஊரில் பெண்களையும் மாணவர்களாக ஏற்றுக்கொள்ளும் பாடசாலை ஒன்றில் Anna Rogstad கல்வி கற்றார்.

1873இலிருந்து தனியார் ஆண்கள் பாடசாலையில் உயர்நிலை ஆசிரியராக பணியாற்றினார். 1877இல் Kristiania (நோர்வேயின் தற்கால தலைநகரமான Oslo) எனுமிடத்துக்கு குடும்பத்துடன் குடிபெயர்ந்தனர். 1892இல் நோர்வே ஆசிரியர் சங்கத்தை நிறுவினார்,

மேலும் ஆரம்பம் முதல் 1907வரை ஆசிரியர் சங்கத்தின் துணைத் தலைவராக பணியாற்றினார். அச்சங்கத்தில் அங்கத்துவம் வகித்த பெண்ணுறுப்பினர்கள், ஆண்களுக்கு சமமான பிரதிநிதித்துவம் கொண்டிருந்தனர்.
அதனால் பல்வேறு கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு, 1911இல் நோர்வே ஆசிரியர் சங்கத்திலிருந்து விலகினார். அடுத்த ஆண்டிலேயே பெண்களின் உரிமைகளுக்காகப் போராடுவதற்காக தனியாக நோர்வே ஆசிரியர் சங்கத்தை நிறுவ அவர் முன்முயற்சி எடுத்தார்.

19ஆம் நூற்றாண்டில் ஆண், பெண் ஆசிரியர்களுக்கு இடையில் பல்வேறு ஏற்றத்தாழ்வுகள் இருந்தன. மிகமுக்கியமாக ஆண் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளத்தில் அரை மடங்கு சம்பளமே (50%) பெண் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது. 1909வரை பெண்கள் தலைமை ஆசிரியர்களாக உயர் பதவிகளை வகிக்க அனுமதிக்கப் படவில்லை. மேலும்பல இறுக்கமான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. இதனால் மனமுடைந்த Anna Rogstad பெண் ஆசிரியர்களின் உரிமைகளுக்காக கடுமையாகப் போராடினார்.

1820-1830களில் ஆண்கள் (இளையோர்) பொது ஆசிரியர் பயிற்சி கல்லூரிகளில் இலவச ஆசிரியர் பயிற்சியைப் பெற்றனர். அதே வேளை பெண்கள் பணம் செலுத்தியே தங்கள் கல்வியை பெற வேண்டியிருந்தது.

ஆண்கள் கல்வி கற்கும் கல்லூரிகளிலே பெண்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. பெண்கள் அடிப்படை தகுதி கல்வியினை மட்டுமே பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டனர். இவை ஆண் ஆசிரியர்களின் கல்வியை விட மிகக் குறைந்த கல்வித் தரத்தைக் கொண்டிருந்தன. இதை Anna Rogstad கடுமையாக விமர்சித்தார். ஆண்களுக்கு இணையாக பெண்களுக்கு ஆசிரியர் பயிற்சி கல்லூரிகள் திறக்கப்பட வேண்டும் என்று அவர் கோரினார். அவரும் அவரது ஆதரவாளர்களும் நீதி மன்றில் வழக்கு தொடுத்து 1890ல் அவ்வழக்கில் வெற்றி பெற்றனர்.

Anne Rogstad கற்பித்தல் துறையின் வளர்ச்சியிலும் அக்கறையோடு செயற்பட்டார். பல பாடநூல்களை தாமே எழுதினார். பல தன்னார்வ ஆசிரியர்களுடன் இணைந்து, இளம் பெண்களுக்கு வீட்டு பராமரிப்பு, ஆடை தயாரித்தல், ஆங்கிலம் மற்றும் புத்தக தயாரிப்பு ஆகியவற்றில் மாலை நேர வகுப்புகளையும் ஏற்பாடு செய்தார். இளம் பெண்களின் நிதி நெருக்கடியை மாற்றுவதே இதன் குறிக்கோளாக இருந்தது.

1900ஆம் ஆண்டில் இவர் நிறுவிய "இளம் பெண்களுக்கான தொடர் பாடசாலைக்கு இந்தப் பாடநெறி பயன்படுத்தப்பட்டது. 1909ம் ஆண்டில் அவரது நகராட்சி அவரது பாட நெறியினை பயன்படுத்த ஆரம்பித்தது. அத்துடன் Anne Rogstad பாடசாலை இயக்குநராகவும் நியமிக்கப்பட்டார். இக்காலக்கட்டத்தில்

Anna Rogstad நோர்வேயின் அரசியலில் ஈடுபட ஆரம்பித்தார். 1909இல் Frisinnede Venstre (Fr.V.) எனும் கட்சியை நிறுவுவதில் அவரும் பங்கேற்றார்.

அந்த ஆண்டு பொதுத் தேர்தலில், கிறிஸ்டியானியாவில் உள்ள Gamle Aker மாவட்டத்தைச் சேர்ந்த Frisinnede Venstre (Fr.V.) மற்றும் Høyre கட்சிகளுக்கான கூட்டுப் பட்டியலில் புதிதாக நிறுவப்பட்ட கட்சியை Anna Rogstad பிரதிநிதித்துவப்படுத்தினார்.

பெண் உரிமைப் போராட்டங்களுக்கு பின்னர் பெண்கள் வாக்களிக்கவும், தேர்தலில் வேட்பாளராக நிற்கவும் உரிமை பெற்றனர். 1907ல் நோர்வேயின் சட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் பிரகாரமே இவ்வுரிமை வழங்கப்பட்டது. அவ்வாண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் முக்கிய வலதுசாரி அரசியல்வாதி ஜென்ஸ் பிராட்லி பட்டியலில் முதலிடத்தில் இருந்தார். அந்தத் தேர்தலில் அவர் ஒரு பிரதிநிதியானார், அதே நேரத்தில் Anna Rogstad ஒரு துணை பிரதிநிதியானார்.

17.03.1911 அன்று, Anna Rogstad முதல் முறையாக பொதுத் தேர்தலில் போட்டியிட்டு நோர்வே நாடாளுமன்றில் முதல் பெண்மணி ஆனார்,

இது பெண்கள் உரிமைகள் இயக்கதிலிருந்து தமது உரிமைகளுக்காக போராடியவர்களுக்கு பெரும் வெற்றியையும், மகிழ்ச்சியையும் கொடுத்தது. •

சாகாமல் இருத்தல்தானே வாழ்வெனப்படுகிறது இங்கு

மாலினி மாலா

வாழ்தல் பற்றிய எதிர்காலக் கற்பனைகள் எந்தச் சூழலிலிருந்து மனதில் ஊற்றெடுக்கத் தொடங்குகிறதோ அதைச்சுற்றியே தான் வாழ்வின் விருப்பங்கள் அமையும் என நினைக்கிறேன். பண்டிகைகள், கொண்டாட்டங்கள் என அனைத்துக்கும் உயிரிருப்பது நம் கனவுகளைத் தூண்டி விட்ட சிறுபராய விருப்புகளிலிருந்து தான்.

பொதுவாக தீபாவளி மீது எந்த எதிர்பார்ப்பும் இருந்ததில்லை. புதுச்சட்டை கிடைக்கும், வீட்டில் விசேசமாகச் சமைப்பார்கள் அவ்வளவு தான். இரண்டிலும் பெரிதாய் கொண்டாட ஏதுமில்லை அப்போது.

சித்திரை வருடப்பிறப்பு ஊரில் கலை, விளையாட்டு, போட்டிகள் பரிசுகள் எனப் பெரு விழாவாகக் கொண்டாடப்படும். அதன் எதிர்பார்ப்பு பொங்கல் முடிந்ததுமே ஆரம்பித்து விடும்.

பொங்கலுக்கு அடுப்புப் பிடிப்பது, காயவைப்பது, விதவிதமாய் தோரணம், கோலம் என பெரும் எதிர்பார்ப்பைத் தூண்டி விடும் பண்டிகை. அதிலும் மாட்டுப் பொங்கலும் மாட்டைக் குளிக்கவைத்து, மாலையிட்டு, குங்குமம் இட்டு மாட்டுக்கொட்டிலுக்குள் போயிருந்து பொங்குவதும் மிகப் பிடித்ததாக இருந்தது.

வளர்ந்து பெரிதாக பட்டி வைக்க வேண்டும், குந்துகள் வைத்த பழைய கால வீடு கட்ட வேண்டும். வயல் செய்ய வேண்டும். உத்தியோகம் பார்த்தாலும் வயல் காற்றில் கூடவே கைகோர்த்து நடந்து வரும் துணை, வாழ்க்கையாக அமைய வேண்டும். பொங்கல் நாளில் பட்டுப் பாவாடையும் குட்டி வேட்டியுமான வாரிசுகள் ஓடித்திரிய வேண்டும். அப்படியே வயதாக வேண்டும். பின்... பின்.... என வாழ்க்கை அழகான கற்பனையாக இருந்தது.

விளக்கீடு இன்னும் கனவுகளுக்கு வெளிச்சங்காட்டிய பண்டிகை. கிளுவந்தடி வெட்டி குடும்பமே கூடியிருந்து பந்தம் சுற்றி வீட்டில் ஒரு மரம் கூட மிச்சமில்லாது பந்தங் குத்தி எரிய விட்டு, சின்னச்சின்னச் சுட்டிகளில் எண்ணைவிட்டு தீபத்தால் கோலமிட்டு.... மின்சாரமற்ற இரவில் தீப ஒளியில் மின்னும் முகங்களும் அந்த நாளும் அத்தனை அழகு.

சிறுவயதில் ஒரு பெரிய ஆசை இருந்தது. எப்போது சேலை கட்ட அனுமதிப்பார்கள். அதை எப்போதுமே எல்லாப் பண்டிகைக்குமே கட்டவேண்டும், தலைகொள்ளா மல்லிகைச்சரம் சூடவேண்டும். மெல்லியதாய் ஒரு ஹொர்ட்டன் சாறி, கை நிறையக் காப்பு, நித்தம் கோவில் வாசல் என அந்தக் கற்பனையே கலகலவென்றிருந்தது.

இப்போதும் பண்டிகைகள் வருகின்றன. எங்கள் பண்டிகைகள் பற்றி இங்கேதும் விடுமுறைகளில்லை. விழாக்களில்லை, பட்டியில்லை, குந்து வீதில்லை, வயலில்லை, பொங்கல் நாளில் உறைபனியில் தான் அடுப்புப் பிடிக்க வேண்டியிருக்கும். கோலத்தை உறைபனி எம்மீது போடும். வீட்டுக்குள் மின்சார அடுப்பில் பழைய அரிசியில், சில்வர் பாத்திரத்தில் சமைக்கும் சக்கரைச் சாதத்தை நான் பொங்கல் எனச் சொல்வதில்லை.

எலும்புக் குருத்தை ஊடுருவும் குளிரில் சாறி கட்டும் எண்ணமே எழுவதில்லை. விளக்கீட்டுக் காலத்தில் ஹெலோவின் பூசனிக்காய்க்குள் மெழுகுதிரி வைப்பார்கள். ஊரோடு ஒத்து ஓட நானும் வைக்கிறேன். விளக்கீட்டுக்குச் சுட்டி வைத்தால், தன் வீடும் தீப்பற்றி விடக்கூடும், வேண்டுமானால் மின்சார சர விளக்கை தொங்கவிடு எனச் சொல்லும் பக்கத்து வீட்டுக் காரனுக்காக பந்தமுமில்லை சுட்டியுமில்லை.

அம்மா உன் எஞ்சிய காலத்தில் நீ நினைத்த வாழ்வை உன் வாழ்தல் பற்றிய கனவை வாழ்ந்து விடு என்று சொல்லும் பிள்ளைகளை முத்தமிட்டு வெறுமையாய் வெளியே வெறிக்கத்தான் முடிகிறது.

அப்படியே தான் பண்டிகைகளின் நாட்கள் வருகின்றன போகின்றன. இனி எதையும் புதிதாக ஆரம்பிக்க முடியாது என்று சொன்னால் இந்தத் தலைமுறைக்குப் புரியாது. மேற்கு நோக்கிச் சென்று கொண்டிருக்கும் சூரியனைப் பாதியில் இழுத்துவந்து மீண்டும் கிழக்கிலிருந்து ஆரம்பிக்கலாம் என வாதாடும் தலைமுறை அவர்களது.

இந்தப் புலம்பெயர்வு எதைத் தந்தது எனக் கேட்டால் பலரிடம் கொண்டாட்டமான பதில்கள் இருக்கலாம். என்னைப் பொறுத்தவரை வாழ்க்கையைத் தின்றுவிட்டு உழைக்கும் இயந்திரமாக்கியது. இதற்குள் வாழ்கிறாயா எனக் கேட்டால் ஆமாம் என்று தானே சொல்ல வேண்டும்.

உடல் இயங்குவதைத் தானே வாழ்தல் என்கின்றோம்.
எங்கே, எப்போது, ஏன் இறந்தேன் என்றுதான் தெரியவில்லை. □

இப்போ கடல் நீர்மட்டம் உயர்ந்து காணப்பட்டது. இந்த நேரத்தில் அதிகமான பாரையும் பாலையும் கயலும் முரலும் தீனி தேடி கொக்குக்குடாக் கொச்சத்துக்குள் திரளாக வரும். அவற்றை வேட்டையாட நிச்சயம் முண்டன் அங்கேதான் வரும் என்பதைக் கணக்குப் போட்டுக் கொண்டார் அம்மான். சாந்தமரியாவில் ஏறி நங்கூரத்தைத் தூக்கும்போது ஓடிவந்து கடையாலில் ஏறிக்கொண்டாள் மரியம் மகிறம்மா. அவள் தனது தலையில் தண்டையலுக்குரிய ஒரு தலைப்பாகையை அணிந்து கடையாலில் கெப்பேறுடன் அமர்ந்திருக்கக் கண்ட அம்மான் சடனாகத்தானே தன்னையும் அறியாமல் கையெடுத்துக் கும்பிட்டு வணக்கம் சொல்லிக் கொண்டார்.

இருவரும் நீண்ட நேரமாக எதையோ தர்க்கித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களிருவருக்கும் இடையிலான அந்த உரையாடலிலிருந்து யாதொரு வார்த்தைதானும் எனது செவிகளை எட்டவில்லை. அவர்கள் இருவரின் தர்க்க உரையாடல் இந்தக் கதைக்கு முக்கியமானதாகக்கூட இருக்கலாம். அத்தகைய உரையாடலைக் கேட்காமல் கப்பித்தான் பிலிப்பன் பேதுரு அம்மானின் முண்டன்சுறா வேட்டை பற்றிய கதையை எப்படி எழுத முடியும்..?

“ஏய் கடலாளே! அவர்களிருவரினதும் உரையாடலில் சிலசிறு வார்த்தைகளையேனும் உனது அலையின் ஓசையினூடாகவோ, அல்லது ஒருசிறு மென்காற்றின் மூலியமாகவோ எனது செவிகளில் கொண்டுவந்து சேர்த்துவிடு. கடலாரின் வலிகளில் ஒருசிறு வரியையேனும் எழுதிச்செல்ல ஆசைப் படுகிறேன்..”

எனது வேண்டுதல் கடலாளின் காதுகளை எட்டியதோ என்னவோ...., மௌனித்துக்கிடந்த சோளகம் மெல்லத்தானே வார்த்தைகளை எடுத்து வந்து சேர்த்தது.

“நீயெதற்கு வருகிறாய் எனதருமை மரியம்?” மரியம் மகிறம்மாவைப் பார்த்துக் கேட்டார் கப்பித்தான் பிலிப்பன் பேதுரு அம்மான்.
“நானும் வருவேனடா கிழவா, நங்கூரத்தைத் தூக்கு” என்றாள் மரியம் மகிறம்மா.
“மூன்று மண்டாக்கள்தானேயடி குமரி கொண்டு வந்திருக்கிறேன்.... நீயும் எறிவதற்கு போதியளவு மண்டாக்கள் என்னிடமில்லை. நீ கரையேறிவிடு” என்றார் அம்மான்.

ஒருசிறு சிரிப்பை உதிர்த்தபடி சொன்னாள் மரியம் “கிழவா, நீ அறிய மாட்டாயா..., நான் நீரடி நீச்சற்காரி என்று. எனக்கெதற்கு மண்டாவும், மண்டைக்கயிறும்..? ஏழு சமுத்திரங்களையும், ஏழு மலைகளையும் தாண்டிச்சென்று இளவரசி நீலரோசாவை மீட்டு வந்த நாகமுத்தாவின் மகன் பாலசூரத்தானைப் பற்றிய கதைகளை பாலவயதில் நீதானே எனக்குச் சொன்னாய்.
வெட்டுண்ட கைகள் வேதனை கொண்டேனே, விதிவசத்தால் இந்த கெதியை அடைந்தேனே, கொண்டுண்ட ரத்தமே கொஞ்சமோ மாதாவே, கும்பிடும் கரங்களை கொண்டு சென்றேரே என்று ஞானசவுந்தரியின் பாடல்களைப் பாடிக் காட்டி, புலேந்திரனின் கதைகளை நீதானே கிழவா எனக்குச் சொல்லித் தந்தாய்.

மாதகமுனைக் கண்ணகி கதையையும், குருவிநாச்சியார், றோசை, பிலுப்பாச்சி, யக்கமுத்து, ஆரோக்கியத்தாள், சவிராசி, மசேலியாள், பொன்னம்மா போன்ற கரையாண்ட மூத்தாளுகளைப் பற்றிய கதைகளையும் சொல்லித் தந்தது நீதானே மறந்து விட்டாயா கிழவனே...?
அவர்கள் வாழ்ந்த காலத்தில் நானில்லை. அவர்களின் கதைகளைச் சொல்லித் தந்த நீ எனது காலத்தில் வாழ்கிறாய். அவர்களும் நானும் இல்லாமற்போன கரை-யில் நீ இன்னமும் வாழ்கிறாய். அவர்களதும் எனதும்..., கூடவே உனதுமான கடற்திருச்சபையின் கதைகளை இப்போதுள்ள தலைமுறைக்கு சொல்லும் பேறுபெற்ற பேதுரு நீதானே கிழவனே.

மாசற்ற கடல் வேடுவன் நீ. வேட்டையாடு. ஒண்டிவாழ வந்தவர்களும் இப்போ தம்மை கடலோடிகள் என்றுதான் சொல்கிறார்கள். கடலுக்கு ஒவ்வாத தொழில்களைக் கையிலெடுத்துக் கடற்களங்களை பரிநாசம் செய்கிறார்கள். கடற்பாறைகளையும், சாட்டாமாறுகளையும் அலவாங்கும் கடப்பாரையும் கொண்டு அடித்துடைத்து நொறுக்குகிறார்கள். கால்வைத்து ஆழியில் இறங்காமல் கரையில் நின்றமேனிக்கு பண்ணைகளையும் பட்டிகளையும் களமெல்லாம் ஆழ ஊன்றி, கடல்மாதாவின் அழிவில் ஆதாயம் காணும் இவர்கள் தம்மையும் கடலவர் என்று பிதற்றுகிறார்கள். காத்தாட, கடலாட, கடலலையில் கலமாட, கலமேறி ஆழியிலே சங்கெடுத்து உயிராட கரையாண்ட சந்ததிகள் காலத்தால் மறைந்தனவே அம்மான்"

"இப்படி நீ சொல்லாதே மரியம். அனைத்து உயிரிகளின் மீட்சிக்காக உப்புக்கடலில் உயிரைக் கரைத்தவள் நீ. இப்படிச் சொல்லலாமா....?" மூன்று தலைமுறைகளாக கடலையும் கரைகளையும் நீங்கி, வன்னிகாட்டில் வசித்தவர்களுக்கு கடல்களையும் கரைகளையும் சுவாசிக்க ஏது வகை எட்டியது சொல்..? வேட்டொலிகள் ஆடியடங்கியபின் தமது கரைகளுக்கு மீளவந்த சந்ததிக்கு யாரிருந்தார் கடலைக் கற்றுக் கொடுக்க...? யுத்தம் கிழித்துப்போட்ட இரண்டு மூன்று தலைமுறைகளுக்கு கடலின் அருமை கற்பிக்க எந்த மூத்த கடலோடி உயிரோடு இருந்தார் சொல்லு..., யாருமே இல்லை. ஆகவே மரியம் ஆரையும் நோகாதேயடி நீ"

"பாவம் அம்மான் இவர்கள். ஏகதேச வர்த்தகத்தாரின் அகலத் திறந்துவிடப்பட்ட கதவுகளினூடாக அள்ளுகொள்ளையாக வந்து குவியும் ஆடம்பரங்களை சிறு குடிசைகளால் தாங்கமுடியவில்லை. சட்டிபானை அட்டாளைகளில் அகண்ட மின்திரைகளை அடுக்கி வைக்கவும் வகையில்லை. வகையறியா மக்கள் வந்து சேர்வது ஓரிடத்தில்தான். எவ்வகையிலேனும் பொருளீட்டிவிடவேண்டும் என்ற இடம் தமது கனவுகளை எட்டிவிடுவதற்காக கரையோரச் சனத்தார் தமது தாயான கடலாளையே கூறுபோடவும், ஈடுவைக்கவும் தலைப்பட்டு விட்டார்கள். இந்த நிலை நீடித்தால் கடல்களெல்லாம் கோயிற்கேணிகளாகவும், தெப்பக் குளங்களாகவும்தான் மாறிவிடும். இதையெல்லாம் எடுத்துச்சொல்ல கரையோரம் யாருமில்லை" கடையாலில் அமர்ந்திருந்த மரியம் மகிறம்மாவின் கண்கள் கலங்கித் ததும்பின. ததும்பும் அவளது கண்ணீரத் திவலைகளில் நெருப்பெனக் குந்தியிருந்தது கோபம். தொடர்ந்து பேசி-னாள் மரியம் மகிறம்மா.

"உனது ஏழேழு தலைமுறைகளின் பொருட்டு, ஆயுள்பரியந்தம் நீ வேட்டையாட வேண்டியவன். அதுதான் உனது பணி. முடிவுகளை கடலாளின் கைகளில் ஒப்படைத்துவிடு. நீ.. வேட்டையாடு கடலில். கைமீறக் கண்டால் தரையிலும் வேட்டையாடு. கிழவா..., நீ வேட்டையாடுவதை காணத்தான் வந்தேன் நான். வடகடலை ஆக்கிரமித்த போராவை சிதைத்ததோடு எனதான வேட்டை முற்றுப் பெற்றுவிட்டது. இப்போ நீ போராடுவதைக் காணத்தான் வந்தேன்"

"அடியேய் குமரி..., நான் எண்பதையும் தாண்டிய கிழம், என்னால் என்ன செய்ய முடியும் சொல்..?"

"உன்னால் முடியும் என்பதால்தானே புறப்பட்டாய். முடியும் தூக்கடா கிழவா நங்கூரத்தை."

யாரிவள்..? கடல் நட்சத்திரத்தைக் கையில் ஏந்தியபடி வந்து அம்மானின் கடையாலில் கெப்பேறுடன் ஏறி அமர்ந்திருக்கும் இவள் யாராக இருக்கக்கூடும்..? யாரிந்த மரியம் மகிறம்மா...? வடகடலை ஆக்கிரமித்து நின்ற இரும்புக் கப்பலை உயிர்கொண்டு தகர்த்தவளாம். பத்தொன்பது வயதில் கடல்படுசேனையை உயிர்கொண்டு உருக்குலைத்தவளாம். கடலடி நீச்சற்காரி. கடலம்மா பிரசவித்த நீலநெருப்பாள்.

இந்தக் கதை சொல்லியின் பொருட்டு கடலாளே உனக்கு

நன்றி.

(கப்பித்தானின் வேட்டை அடுத்த இதழிலும் தொடரும்)

Oslo தமிழ்ப் புத்தக கண்காட்சியில்....

பானுபாரதியின் உன்னத சங்கீதம்



கவிதா லட்சுமி

ஒரு ரயில் பயணத்தில் நான் படித்து முடித்த கவிதை நூல் "**உன்னத சங்கீதம்**".

ஒரு நூலை முழுமையாகப் படித்து முடிக்கும்போது கிடைக்கும் மகிழ்வு வார்த்தையில் அடங்காதது.

கவிஞர் பானுபாரதியின் மொழிபெயர்ப்பில் வெளியான உன்னத சங்கீதத்தின் பக்கங்கள் எண்பது. நோர்வேஜிய மொழி இலக்கியங்கள் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டிருந்தாலும், அவை ஆங்கில மொழிபெயர்ப்பு மூலமே தமிழாக்கம் செய்யப்பட்டவை. நோர்வேஜிய மொழியில் இருந்து நேரிடையாக தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்ட முதல் நூல் "உன்னத சங்கீதம்" என்பது குறிப்பிடத்தக்கது.

நோர்வேயின் மலையிடைக் கடல்சூழ் ஓலசுண்ட் நகரை வதிவிடமாகக் கொண்ட கவிஞர் பானுபாரதி அவர்கள் கவிஞர் மட்டுமல்ல, இவர் சமூக செயற்பாட்டாளராகவும், பெண்ணியவாதியாகவும் அறியப்படுகிறார். "**பிறத்தியாள்**" என்ற கவிதை நூலுக்குச் சொந்தக்காரி. தனது நண்பர்களோடு இணைந்து சுமைகள் என்ற இதழிலும் பணியாற்றியவர்.

கவிதைகளை மொழிபெயர்ப்பு செய்யமுடியாது என்பர். மொழியாக்கம் செய்தலே முறையென்பர்.

"உன்னத சங்கீதம்" நூல் நோர்வேஜிய கவிஞர்களது மிக முக்கியமான கவிதைகள் சிலவற்றை மொழியாக்கம் செய்திருக்கின்றது. நோர்வேயில் இன்று மூன்று சந்ததிகளாக இலங்கைத் தமிழர்கள் வாழ்கின்றனர். இதில் எனது மூத்த சந்ததிகள் தமது வாசிப்புத் தொடர்ச்சியை இழந்து பல தசாப்பதங்களாகி விட்டன என்பது எனது கருத்து. பொதுவாக பாரதி என்ற பெயரைத் தெரிந்து வைத்திருக்கும் அளவுக்கு, பிற கவிஞர்களை எமது பெரும்பான்மைச் சமூகம் அறிந்து வைத்திருப்பதில்லை. பாரதி ஒரு மகா கவிஞன் என்றாலும், இலக்கியக் காலவோட்டத்தில் பாரதி ஒரு மையப்புள்ளி மாத்திரமே. பாரதிக்கு முன்னரும் பின்னரும் பல காத்திரமான கவிஞர்கள் இருந்திருக்கின்றனர். பல கனதியான கவிதைகளும் இருக்கின்றது. ஆனாலும் இன்றைய வெகுஜன மக்களால் பெரிதும் அறியப்பட்ட கவிஞன் பாரதிதான்.

இலங்கைத் தமிழ்ச் சமூகம் நோர்வே நாட்டிற்குப் புலம் பெயர்ந்து ஆறு தாசாப்பதங்களைக் கடந்திருந்தாலும், நோர்வேஜியக் கவிஞர்களைப் பற்றிய தகவல்களும், பெயர்களும் எண்பது சத வீதத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்பதே எனது கணிப்பு. எமது அடுத்த தலைமுறைகள் அப்படியல்ல. கல்விக்கூடங்கள் அடுத்த தலைமுறைக்கு நோர்வேஜியக் கவிஞர்களையும் கவிதைகளையும் அறிமுகப் படுத்துகின்றன. இதன் அடிப்படையில் பானுபாரதியுடைய "உன்னத சங்கீதம்" கவிதை நூலுக்கான முக்கியத்துவம் முதல் சந்ததியினரைச் சார்ந்தே வருகிறது. நோர்வேஜிய மொழியில் ஒரு கவிதையைப் படித்து விளக்கிக்கொள்ள முடியாதவர்களுக்கு இந்நூல் முக்கியமாகிறது.

நோர்வேஜியக் கவிஞர்களான Marie Takvam, Inger Hagerup, Willy Flock, Stein Mehren, Inger Hagerup, Næstved, Helge Vatsend இந்நூலில் இடம் பிடித்திருக்கிறார்கள். எனினும் இரு கவிஞர்களை இந்நூல் முக்கியப் படுத்துகிறது. ஒன்று மரிய தக்வம், மற்றையவர் இங்கர் ஹாகரூப். இவ்விரு கவிஞர்களுடைய குறிப்புகளும்கூட ஏனைய கவிஞர்களை விடவும் ஆழமாக எடுத்துரைக்கப் பட்டிருக்கின்றது குறிப்பிடத்தக்கது. மீதமுள்ள கவிஞர்களை சில வரிகளிலே கடந்து செல்லப்பட்டிருப்பதைக் காணக் கூடியதாகவும் இருக்கின்றது.

படைப்புகளுக்குக் காலம் இருக்கிறது. ஒரு இலக்கியத்தை வாசிப்புக்கு உட்படுத்தும் போது அதன் காலத்தைக் கவனத்தில் கொள்வது முக்கியமானதாகிறது. இது கவிதையோ, செய்யுளோ, கதையோ, காவியமோ அல்லால் கட்டுரையோ எதுவாகினும் எழுதப்பட்ட காலம் முக்கியத்திற்குரியது. காலத்தின் பண்பாடு, கலாச்சாரம், எழுதிய எழுதுப்படாத சமூக விதிகள், சமூக அமைப்பு என்றனைத்துமே படைப்புகள்எழுத்துகள் மூலம் பிரதிபலிப்பன. "உன்னத சங்கீதம்" நூலில் இடம்பிடித்த கவிஞர்கள் அனைவரும் இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள்.

இரண்டு முக்கியமான பொருளைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒன்று, இக்கவிதைநூலில் இடம்பெற்ற கவிஞர்கள் அனைவருமே இரண்டாம் உலகப்போரோடு தொடர்புடையவர்கள். இவர்களுடைய கவிதைகள் விடுதலையுணர்வு, சுதந்திர வேட்கை போன்ற உணர்வுகளைப் பிரதிபலிக்கும் அதேவேளை, மனித மற்றும் பெண்வாழ்வு சார்ந்த துயரங்களையும் ஆழ்ந்துரைக்கிறன.

மரிய தக்வமையும், இங்கர் ஹாகரூப்பையும் தனது மனமொத்த கவிஞராக பானுபாரதி தேர்வு செய்தமைக்குக் காரணிகள் உண்டு. அது சமூக அமைப்பு, வாழ்வியல், அகம் சார்ந்திருக்கிறது. அன்றைய நோர்வேயின் வாழ்க்கை முறையும், சமூக அமைப்பும், போரும் ஏற்படுத்திய அகம் சார்ந்த கவிதைகளே பானுபாரதியால் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றன. மேலும் ஈழத் தமிழர்களது போர்காலத்துக் கவிதைகள், பெண்ணிலைக் கவிதைகள் போன்றவற்றோடு நெருக்கம் உடையன. ஏறத்தாள பானுபாரதியின் இளமைப் பருவத்தை ஒப்பிய வாழ்வு முறைக்கும், தேர்ந்தெடுக்கப்பட்ட கவிஞர்களின் கால வாழ்வுமுறைக்கும் உள்ள தொடர்பினை நாம் உய்த்துணரமுடியும்.

நோர்வேயின் சமூக அமைப்பினதும், வாழ்வியலினதும் மாற்றங்களும், வளர்ச்சிகளும் குறுகிய காலத்தில் எழுந்தவை. சில தசாப்தங்கள் முன்புவரை நோர்வே நாட்டின் நிலை வேறு, இன்றைய நிலை வேறு. இன்று, வாழ்க்கைத் தரத்தில் உலகின் சிறந்த நாடுகள் பட்டியலில் பல ஆண்டுகளாக நோர்வே முதலிடத்தில் இருந்து வருகிறது. நோர்வேஜிய, ஐரோப்பிய பெண்வாழ்வியல், பெரும் கொடுமைகள் நிறைந்ததாக இருந்திருக்கிறது என்பதை இன்று நம்புவது கடினமாகதாகக் கூட இருக்கலாம். நோர்வே நாடு பெண்களைக் கையாண்ட விதத்திற்கு இரண்டு உதாரணங்களைச் சொல்லமுடியும்.

பெண்களுக்கான 16 மணிநேர வேலையுடன், வீட்டையும் பொறுபேற்று நடத்திய பெண்களாக நோர்வே சமூகம் இருந்திருக்கிறது. இதன் காரணமாக நோய்வாய்ப்பட்டு மரணித்த பெண்கள் தொகை கணிசமானவை. அதே போல சூனியக்காரிகள் என்ற பெயரில் கொத்துக்கொத்தாக பெண்களைக் கொன்றுகுவித்த ஐரோப்பிய நாடுகளின் பட்டியலில் நோர்வேநாடும் குறிப்பிடத்தக்க தொகைப் பெண்களைக் கொன்றிருக்கின்றது. இவை அதிகம் பேசப்படாத நோர்வேயின் துயர வரலாறுகள்.

மொழி

ஒரு கட்டுரையை மொழியாக்கம் செய்வதென்றால் கூட ஓரளவு நேரிடையாகச் செய்தல் சாத்தியம் தான் ஆனால், கவிதைகளை மொழிபெயர்ப்பது அப்படியானதல்ல. கவிதைகள் குறியீட்டு வடிவம் நிறைந்தவை.

பல விடயங்கள் நேரிடையாக மொழியாக்கம் செய்ய முடியாத சொற்களை கொண்டவையாக இருப்பது மரபு. கவிதை களில் கையாளப்படும் ஒரு சொல்லுக்குப் பின்னால், காலம், நிலம், சமூகப்போக்கு, அரசியல் போன்ற பின்புலங்கள் கட்டமைக்கப்பட்டிருக்கும் அச்சொல் மற்றொரு மொழிக்கு கடத்தும் போது இத்தகைய பின்புலங்களைக் கொண்ட, அல்லது மாற்றம் செய்யப்படும் மொழியின் காலம், நிலம், அரசியல் சார்ந்தும், அதன் குறியீடுகள் கலையாமலும் சொற்களைத் தேர்வு செய்ய வேண்டும். முக்கியமாக கவிதையின் நயத்தையும் கவனத்திற்கொள்ள வேண்டும். இது அத்தனை சுலபமான காரியமன்று.

குறியீடுகளையும், சொல்லையும், கவிதை பேசவிளையும் பொருளையும் சரியாகக் கையாளும் பெரும்பாண்மை மொழியாக்கக் கவிதைகள், கவிதைக்கான கவித்துவத்தை இழந்து வெறும் வரிகளாக இருந்துவிடுகின்றன. இதன் காரணமாக கவிதை வாசிப்பின் இரசிப்புத் தன்மையை வாசிப்பாளன் இழந்துவிடுகிறான். கவிதைகள் மட்டுமல்லாது பல மொழியாக்க நாவல்களும் ஒரு மொழியின் சீரான ஓட்டத்தை இழந்துவிட்டிருப்பதை நாம் பல மொழியாக்க நாவல்களிடம் காணமுடிகிறது.

பானுபாரதியின் எழுத்துத் திறன் ஆழமானது. அதை அவருடைய "பிறத்தியாள்" கவிதை நூலில் காத்திரமான கவிநயத்தோடான கவிதைகள் பலவற்றைக் காண முடியும். "உன்னத சங்கீதம்" கவிதை நூலில் எழுதப்பட்ட கவிஞர்களின் குறிப்புகளில் அவருடைய எழுத்து சீரான ஒரு ஆற்றோட்டம்போல பயணிப்பதைக் காணமுடியும். தற்காலத்தில் பெரும்பாண்மை எழுத்துகள் இலகுத் தன்மையை இழந்தும், பெரும் சொற்றாடல்களை வலிந்து இணைத்தும் வாசிப்பு ஈர்ப்பைக் குறைத்துக் கொண்டிருக்கும் காலத்தில், பானுபாரதியின் மொழியானது வாசிப்பாளரை வாசிப்பில் ஒன்றச் செய்வது குறிப்பிடத்தக்கது.

ஒருமுறை இப்சனுடைய கவிதையான "என் நட்சத்திரத்திற்கு" என்ற கவிதையை நான் மொழி பெயர்ந்திருந்தேன். சென்ற வருடங்களில் இப்சன் வாழ்ந்த வீடுகளை (தற்போதைய அருங்காட்சியாகம்) சென்று பார்வையிட்ட போது, அங்கு கிடைத்த தகவல்கள் என்னை மீண்டும் அக்கவிதையை மொழியாக்கம் செய்யத் தூண்டியது. அப்படி இரண்டு மொழியாக்கங்களையும் வைத்துப் பார்க்கும் போது இரண்டு வேறுபட்ட கவிதைகள் என் கைகளில் இருந்தன. சிறந்த கவிதை மொழியாக்கம் என்பது சொந்தமாகக் கவிதை எழுதுவதைவிடக் கடினமானதென்பது எனது கருத்து. இந்தக் கடினத்தை "உன்னத சங்கீதத்தில்" கவிஞர் பானுபாரதியும் உணர்ந்திருக்கிறார் என்பதைக் காண்கிறேன்.

சில அகம் சார்ந்த மொழிபெயர்ப்பிற்குக் கவிதைகளுக்கு காலம், நிலம், அரசியல் தாண்டி அக்கவிதைக்கான பின்புலத்தை அறிந்துகொள்ளும் போது அது மேலும் சரியான பாதையில் பயணிக்கத் தொடங்குவதை எனது சொந்த அநுபவத்தினூடு உணர்ந்திருக்கிறேன்.

பிறத்தியாள் கவிதைநூலில் இருந்து....



நம்பிக்கையோடு வந்து போகும்
கிளிக்கூட்டத்திடம்
ஒரு சோடி இறக்கைகள் மட்டும்
இரவல் வாங்க முடிந்தது.
இரவல் சிறகை
அகல விரித்த போதும்
உயரத்தெழ முடியவில்லை

உன்னத சங்கீதத்திலிருந்து (மரிய தக்வம்..)

ஒரு போதும், ஒரு போதும்
என்னால் என்னை
ஆளுகை செய்ய முடியவில்லை
இதம் வேண்டி கரங்களை பற்ற
இன்னொரு முறை
நான் முனையும் போதெல்லாம்
மீண்டும் மீண்டும்
சிறைப்படுகிறேன்.

இந்த இரண்டு கவிதைகளுக்கும் பெண்ணிலை சார்ந்து வரும் பொருள் ஒன்றுதான். அகம் ஒன்றுதான். வார்த்தைகள் வேறு.

பிறத்தியாள் கவிதைநூலில் இருந்து...

கணங்கள் யமன்களானதால்
கவலைகள் தேசியமாகவும்
கண்ணீர் பொதுவுடமையாகவும்
ஒப்பாரிகள் தேசிய கீதமாகவும் ஆகி விட்டன
அப்பாவிகளின் பொதுவுடமையால்
அனர்த்தபூமி
கழுவப்பட்டு நித்தியம் மெறட்டும்

உன்னத சங்கீதத்திலிருந்து (இங்கர் ஹகருப்...)

அவர்கள்
எங்கள் பண்ணைகளை எரித்தனர்
அவர்கள்
எங்கள் ஆண்களை கொன்றனர்
எங்கள்
ஒவ்வொரு மரணத்தின் பின்னே
ஆயிரமாய் திரண்டெழுவோம்
எல்லாவற்றையும்
எல்லாவற்றையும் இழந்த போதும்
சளைக்காது
ஆயிரமாய் மலையென திரண்டெழுவர்
ஓ.. மரணித்த தோழர்களே!
அவர்களால்
எம்மை ஒருபோதும்
அடிபணியச் செய்ய முடியாது.

இது இரு வேறுபட்ட நிலங்களில், வேறுபட்ட காலத்தில் எழுதப்பட்ட போர்க்காலக் கவிதைகள். இங்கர் ஹகருபின் கவிதையின் பொருளை நேர்தியாகத் தமிழுக்குக் கடத்தியிருக்கிறார் பானு பாரதி. பொருளைக் கடத்தும்போது அதன் கவித்துவம் சில நேரங்களில் குறைந்து காணப் படுவதுண்டு. அந்த தருணத்தை சில மொழிபெயர்ப்புகளில் காண்கிறேன். பொருளோடு கவித்துவத்தையும் சேர்த்துக் கடத்துவது என்பது மொழியாக்கம் செய்ய முனையும் பெரும்பான்மை எழுத்தாளர்களுக்கான பெரும் சவால். கவிஞர் பானு பாரதியே இந்த தருணத்தை தனது முன்னுரையில் முதல் சாகித்தியமாக...,
"மொழி பெயர்ப்பாளர்கள் துரோகிகள் என்கிறது இத்தாலியப் பழமொழி. அத்தகைய துரோகத்தை செய்யத் துணிந்து வருடங்கள் பலவாகின்றன"
என்கிறார். மொழிபெயர்ப்பு சார்ந்த நேர்மையான வாக்கு.

நோர்வேஜியக் கவிதைகளை மொழியாக்கம் செய்யும் போது இன்னுமொரு தடங்கல் மொழிபெயர்ப்பாளருக்கு வருகிறது. நோர்வே மொழியில் இரண்டு வகை உண்டு. நோர்வேஜிய மொழியோடு, புதியநோர்வேஜிய மொழி என்ற ஒரு மொழிப் பண்பாடு இங்குண்டு. அன்றைய காலத்து கவிதைகள் பல புதியநோர்வே மொழி என்று அழைக்கப்படக்கூடிய மொழியிலேயே அமையப்பெற்றிருக்கும், டென்மார்க் நாட்டின் கீழ் நோர்வே இருந்ததால் டெனிஸ் மொழியின் ஆதிக்கம் நோர்வேஜியக் கவிதைகளில் ஊடுருவியிருப்பதைக் காணலாம். இப்சனுடைய பல படைப்புகளில் டெனிஸ் மொழிப் பண்பாடே அதிகம் காணப்படுகிறது. இப்படியாக கவிதைகளில் சொற்களை சரிவரப் புரிந்து கொள்வதில் இருபதாம் நூற்றாண்டின் நோர்வேஜியக் கவிதைகளில் சிக்கல்கள் இருக்கிறது. பலமொழிக் கலவையாக இருக்கும் கவிதைகளை மொழியாக்கம் செய்யத் துணிந்ததன் பின்னால் உள்ள பானு பாரதியின் பலமணிநேர உழைப்பை நாம் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. ●

அஞ்சலி!

அமைதியின் மானுடம்

Roald Zweidorff

Takk, Bilde fra: Bergens Tidende FB

ஹோர்டலாண்டின் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியின் (KrF) முன்னாள் மாவட்டச் செயலாளரும், மெதடிஸ்த குருவானவரும், சமூக ஆர்வலரும், அரசியல்வாதியுமான Roald Zweidorff, 28.10.2025 அன்று தனது 88வது வயதில் இறையடி சேர்ந்து விட்டார்.

Roald Zweidorff தனது வாழ்நாள் முழுவதும் தேசிய மற்றும் சர்வதேச அளவில் மனிதம், அமைதி மற்றும் நீதிக்காக அர்ப்பணிப்போடு உழைத்த ஒரு திடமான மனிதர். மேலும் அவர் தனது வாழ்நாள் முழுவதும் சர்வதேச புரிதல் மற்றும் ஒற்றுமையில் அயராது அக்கறை கொண்டிருந்தார்.

Roald அவர்கள் பேர்கன் நகருக்கு ஆரம்ப காலத்தில் வருகை தந்த தமிழர்களுடன் சிறந்த நட்புடன் நெருங்கி பழகியவர். 1983 முதல் ஹோர்டலாந்தின் மாவட்டத் தலைவராக பணியாற்றி, இலங்கை மற்றும் கிழக்கு திமோருக்கான அரசியல் குழுவிலும் அவர் அர்ப்பணிப்போடு தீவிரமாக ஈடுபட்டார். குறிப்பாக இலங்கையில் யுத்தம் நீங்கி அமைதி உருவாக வேண்டும், தமிழருக்கு சிறந்த அரசியல் தீர்வு கிடைக்க வேண்டுமென்று ஆர்வத்துடன் குரல் கொடுத்தவர்.

ஈழப் போராட்டத்தில் நோர்வே அதிகமான அக்கறை கொள்ளுவதற்கு Roald ஒரு முக்கியமான மனிதர் என்று நோர்வே பத்திரிகைகள் அவரது இறப்பு செய்தியில் தெரிவித்துள்ளனர்.

Roald போன்ற பல நல்ல மனிதர்களால் தமிழர்களுக்கு பல்வேறு உதவிகள் கிடைத்தமை மட்டுமல்ல, தமிழருக்கு நியாயமான தீர்வு கிடைக்க வேண்டுமென இலங்கை அரசையும், விடுதலைப் புலிகள் அமைப்பையும் பல தடவைகள் பேச்சு வார்த்தைக்கு ஒழுங்கு செய்தமையும் குறிப்பிடப் படவேண்டியதே. தமிழருக்கு நியாயமான தீர்வு கிடைக்கவில்லை, அவர்கள் இறுதி யுத்தத்தில் அநியாயமாக கொல்லப்பட்டனர் என்ற செய்தி Roald அவர்களையும் வெகுவாய் பாதித்தது.

மனிதாபிமானப் பணிகளை முன்னிலைப்படுத்தவும், அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆதரவைத் திரட்டவும் Roald அவர்களின் மனம் இறக்கும்வரை துடித்தது.

இந்த நல்ல ஆன்மாவுக்கு தேன் தமிழிதழ் தலை வணங்கி நன்றியை செலுத்துகிறது.

-யூலியஸ் அன்ரனி •

எதிர்

புகையிரதப் பயணத்தில்
சன்னலெறிப் பார்வையிலிருந்து
வேகவேகமாக
ஓடிச்சென்று மறையும்
மரங்களைப்போல்
வாழும் காலத்தின் நிகழ்வுகள்
ஒன்றையொன்று போட்டிபோட்டு
ஓடிச்சென்று மறைகின்றன.

எதிர் எதிர் இருக்கையின்
சக பயணிகளும்
தங்கள் தங்கள் தரிப்பிடங்களில்
இறங்கிக் கொண்ட பின்னும்
நிற்காமல் நகர்கிறது புகையிரதம்
தனக்கான
இறுதித் தரிப்பிடம் சென்று
சேரும்வரை.

இறுதித் தரிப்பிடம்
ஒரு
பெரும் பட்டினமாகவோ,
பெரு நகராகவோ,
புற நகராகவோ,
அல்லது
எப்போதாவது வரும்
இரண்டொரு பயணிகளுக்கான
சிற்றூராகவோ இருக்கக்கூடும்.

முகாந்திரமாவது யாதெனில், ...
சென்று சேருமிடம் எதுவென்பதுதான்.

பயணத்தின்
இறுதித் தரிப்பிடம்வரை
யார் யார்
பயணித்து முடித்தோம் என்பதுதான்.

~தமயந்தி~ ●

சிறுவர் பூஞ்சோலை

Lana Edward (6år)

Sijana Dhavapalan (11år)